# திராவிடநாடு

25—8—57 | வார வெளியீடு | விலை 0—2—6


## உணர்வாய், மகனே!

[ மு. சாந்தம் ]

—x—

உனதாகிய திருநாடிது உலகோர்புகழ் தமிழா!
இனமாண்பினை எடுத்தோதிடும் திடமே நீ பெறுவாய்
கனலாகவே மொழிவீசிடும் கயவோரவர் உரையே
மனமாகிய களமேற்றிடாக் குணமாண்பே பெறுவாய்!

களமேகியே பொருநேரமும் தமிழ்வாழவே உழைப்பாய்!
கடல்மேவிய அலைபோலவே உனதாகிய தமிழை,
உளம்பாடிடும் நிலைகாணவே கவிபாடிடு தமிழா!
தமிழ்நாடிது! தலைநாடிது! உணர்வாயிவண் மகனே!

மலைபோலவே இடர்காணினும் மருளாதிரு தமிழா!
உனதாகிய திருநாட்டினை விரைவாயினிப் பெறுவாய்!
கலைவாழ்ந்திடு நிலைகாணவே கலங்காதுழை தமிழா,
தமிழ்வாழவும் இனம்வாழவும் உழைப்பாயினி இவணே!

வடவோரவர்க் கடியேபணிந் திடலேநலம் எனவே
உளமேநிலை உதவாசில அறியார்தமைத் தமிழா,
திடமேஉளம் நிலைகாணவே தமிழ்மானமே தருவாய்!
திருந்தாத்தமிழ்த் திருநாட்டினர் தமையேதிருத் திடுவாய்!

வளமாருயர் திருநாடதன் செழிப்பேஇவண் தருவாய்!
மறுப்பாரவர் தலைவீழவே மறுப்பேஇவண் தருவாய்!
உளமாரவே உனதாகிய தமிழ்வாழவே மகனே
உயிரேகினும் தருவேனென அறைவாய்முர சொலியே!!

# "வாள் பேசினால்!"

"தலைவர் சார்! நான்யார், எங்கிருந்தேன், இத்தனை நாட்களும்எப்படியிருந்தேன் என்பதை யெல்லாம் கேட்டு வெகுவாகப் பாராட்டினீர்கள். வீரமும் தீரமும், அறிவும் ஆர்வமும் கொண்டுவிளங்கிய அஞ்சா நெஞ்சனின் கையிலே அன்றொரு நாள் இருந்தேன். என்னை, அகிம்சையைக் கடைப்பிடித்த காந்தியடிகளின் சீடராகிய தங்கள் வசம் ஒப்படைத்துவிட்டார் ராஜா ரவிவர்மா. இனி, கிளிமானூர் மாளிகையல்ல, என் இருப்பிடம். டில்லிக்குக் கொண்டுபோய் வைப்பீர்கள்—எனக்கு, ஏனைய வாட்களைப் போல மரியாதையும் மதிப்பும் எப்படியும் கிடைக்கப் போவதில்லை! ஏனெனில், அண்மையில் உங்கள் கட்சி கொண்டாடிய 1857 - க்கு முன்பே, அந்நியரின் தலைகளைப் பதம் பார்த்திருக்கிறேன் நான். என்னை வைத்திருந்த மாவீரன், நீங்கள் கொண்டாடிய புரட்சிக்கு முன்பே, ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். அவருடைய தீரம், தாத்தியாதோபேயைவிட, ஜான்சி ராணியைவிட, குறைந்ததல்ல. என்ன இருந்தும் என்ன? எங்கே கிடைக்கிறது, தெற்கேயிருக்கும் எமக்கு மதிப்பு! சுதந்திர வரலாறு குறித்து எடுத்த திரைப் படத்தில் எங்கள் பக்கத்தையே மறந்து விட்டார்களாமே டில்லியினர்!! எனக்கு முன்னதாகவே 1792-ல் வீரபாண்டியக் கட்டப்பொம்மன் என்பார், "ஊராளொருவன் தோட்டத்திலே ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்! இதைக் காசுக்கு இரண்டு விக்கச் சொல்லி காகிதம் போட வெள்ளைக்காரன் யார்?", என்று கேட்டார். எங்கள் கேரளத்துக்குப் பக்கத்திலேயிருக்கும் தமிழ் நாட்டில், பாஞ்சாலங்குறிச்சி என்றோர் பகுதி இருக்கிறது. இந்திய உபகண்டத்தின் குடியரசுத் தலைவர் நீங்கள்! எனினும் உங்களுக்கு, மீரத்தையும் சூரத்தையும் பற்றித் தெரியுமளவுக்கு, இந்த இடம் தெரிந்திராது. அந்த மாவீரன் கட்டப்பொம்மு தூக்கிலே தொங்கினான், வெள்ளையரை எதிர்த்ததற்காக அவனுக்குப் பின் 1801-ல் சிவகங்கை — இதுவும் தமிழகத்தில்தானிருக்கிறது!—மருது சகோதரர்கள் என்பார் வெள்ளைக்காரர்களை எதிர்த்து வீரப்போர் நடாத்தி, மாண்டனர். அதற்கும் பிறகு 1806-ல் வேலூரிலேயிருந்த சிப்பாய்கள் ஆங்கிலேயரை எதிர்த்தனர். அவர்களது வீரவாட்களுக்குப் பிறகுதான், எனக்கு வேலை கிடைத்தது! நான் யார் கையில் தவழ்ந்தேனோ அந்த வேலுத்தம்பி, இந்த மூன்று நிகழ்ச்சிகளுக்கும் பின்னர், வீறுகொண்டெழுந்தவராகும். அவருக்கும் பிறகு எழுந்ததுதான் 1857 எனினும், எங்களவர் செய்ததெல்லாம், உலகக் கண்முன் காட்டப்படவில்லை. அதனால்தான் அஞ்சுகிறேன், என்னை, டில்லியில் ஒரு மூலையில் போட்டு, பிறகு நான் யாரென்பதே அறியாதபடி செய்துவிடுவீர்களோ என்று! என்னைத் தங்களிடம் ஒப்படைக்கும் விழாக் கூடத்திலே எங்களது முதலமைச்சர் நம்பூதிரிபாத் பேசியது உங்கள் கவனத்திலிருக்கும் என்று கருதுகிறேன்.. "பிரிட்டிஷாரை எதிர்த்த வேலுத்தம்பியின் போராட்டம் 1857 - போராட்டத்தைவிட எவ்விதத்திலும் குறைந்ததல்ல. கேரளத்தில்தான் முதன் முதலில் பிரிட்டிஷ்காரர்கள் காலடி வைத்தார்கள் என்றால், அதே கேரளத்தில்தான் பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்து, முதன் முதலாகப் போர்க்கொடியும் உயர்த்தப்பட்டது," என்று சொன்னபோது, எனக்குக் கொஞ்சம் நம்பிக்கை வந்தது. ஏனெனில், நம்பூதிரி அவர்கள், அகில உலகக் கட்சியாம் கம்யூனிஸ்டுகளைச் சேர்ந்தவர்! இந்தியா—இந்தியன்—என்று கருதவேண்டுமே ஒழிய கேரளம், தமிழன், என்கிற

> திருவனந்தபுரத்தில் டாக்டர் பிரசாத்திடம் வீரன் வேலுத்தம்பி வைத்திருந்த வாளைக் கொடுத்தார்களாம்! அந்த வீர வாள், பேசினால்!!

எண்ணமெல்லாம் கூடாது, அது ஒற்றுமையைச் சீர்குலைக்கும் என்று கருதுகிறவர். உண்மையை இப்போது உங்களிடம் சொன்னால் என்ன— என்னை வைத்திருந்த வேலுத் தம்பி, மரணத்தைத் தழுவுமுன் கிளிமானூர் மாளிகைக்கு வந்தார். அங்கே, அவர் கரத்தில் மின்னிய என்னைப் பிரித்து, எக்காரணத்தை முன்னிட்டும், இது, பிரிட்டிஷார் கையில் சிககிவிடக்கூடாது," என்று உறுதிமொழி வாங்கிக்கொண்டார். அப்படி அவர் உறுதிமொழி வாங்கிக் கொண்டதன் நோக்கம் தான் இறந்த மண்ணிலேயே நானும் இருக்கவேண்டும் என்பதுதான்! ஆனால் என்னை எங்கோயிருக்கும் தங்களிடம் கொடுக்கப்போவதாகக் கேள்விப்பட்டேன். தங்கக் கூண்டே செய்து வைத்தாலும் தாய் வீட்டின் பெருமை வருமா? அதனால் எனக்கு ஆயாசமாகவேயிருந்தது, இருந்த இடத்தைவிட்டுப் பிரிய! எனவே, 'கேரளம்', 'கேரளர்' என்று உணர்ச்சியோடு நம்பூதிரிபாத் பேசியபோது, "கவலையில்லை. நம்மை டில்லிக்கு அளித்துவிடமாட்டார்கள்." என்றே நம்பினேன். ஆனால் அந்தோ! என்னைத் தூக்கித் தங்கள் கையிலேகொடுத்துவிட்டார்கள். இனி எப்போது மீண்டும், என்பிறந்த மண்ணுக்கு வருவேனோ, எனக்கேத் தெரியாது. இவ்வளவுவீரத்துடன் பேசிய முதலமைச்சர், என்னை கேரளத்திலேயே வைத்துக்கொள்ள விரும்பவில்லை! வீரவாள்என்கிற பெயர் இருந்தென்ன? வேலுத்தம்பி வாழ்ந்த இடம் என்று சொல்லிக்கொண்டால் என்ன? ஒரே நாடு—ஐக்கியம்—என்கிற பாசி அவர்தம் கண்களைக்கூட மறைக்கிறது! இன்று என்னை வைத்திருந்தவர் உயிரோடிருந்திருப்பாரானால் இப்படி தங்களுக்குக் காணிக்கையாக்கி யிருக்கமாட்டார்!! என் கதி, இப்படியாகிவிட்டது! என்னைக் கையிலே வாங்கிக்கொண்டு, திருவனந்தபுரம் பொதுக்கூட்டத்திலே பேசியபோது சொன்னீர்களாம்— "ரஷியா நீங்கலாக ஐரோப்பா பூராவின் ஜனத் தொகைக்கும் இந்தியாவின் ஜனத் தொகை சமமாக இருந்தும் இந்தியாவில் ஒற்றுமை இருந்து வருகிறது," என்று. உங்கள் குரலிலே, 'நடக்காதது நடக்கிறது' என்கிற பொருள் தொனித்தது! உண்மைதான், ஐரோப்பாவிலே முப்பது கோடி மக்கள், தனித் தனியாக வாழுகிறார்கள். அதனால், அவர்கள் மாண்டு மண்ணாகி விடவில்லை—நேரு பிரானே அழைத்து மரியாதைசெய்யுமளவுக்கு ஒவ்வொரு நாடும் உள்ளது. ஒரு ஜெர்மனி, உலகையே கலக்கியது! ஒரு ஸ்விட்சர்லாந்து, உலக யுத்தம் நடந்தபோது எதிலும் தலையிடாமல் தப்பித்துக் கொண்டது. ஆகவே, சிறிய நாடுகள் என்றால் அவை வாழமுடியாது என்பது, விஷயம் புரிந்தவர்களின் பித்தலாட்டம். நிற்க. இவ்வளவு வேற்றுமையிருந்தும் ஒற்றுமை நிலவிவருகிறது — என்று சொன்னீர்களே! உங்களை ஒன்று கேட்கிறேன். கலியுக ஜனகர், உத்தமர், நெறி பிறழாதவர் என்று உங்களைப் பற்றிப் புகழ்கிறார்கள்; அதனாலேயே இரண்டாம் முறையும் இந்திய உபகண்டத்து ஜனாதிபதியாக உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் —அதனால் கேட்கிறேன், ஒளிக்காமல் சொல்லுங்கள், 'இந்தியா'வை உருவாக்கியது யார்? டில்லியிலிருந்தபடியே இமயமுதல் குமரி வரை ஆளலாம் என்கிற ஏற்பாட்டினைச் செய்து தந்தவன் யார்? வெள்ளைக்காரன்தானே! முகத்தை ஒருபுறமாகப் பிறரைப்போல நீங்களும் திருப்பிக் கொள்ளாதீர்கள். பற்பல நாடுகளாகப் பிரிந்து வாழ்ந்த இப்பூபாகத்தை ஒன்றாக ஆக்கினவன் வெள்ளைக்காரன். அப்படி ஒன்றாக்கி, ஒரே இடத்திலிருந்து 'லகான்' போடத் தான் விரும்பினான் அன்று! அதைத்தான், எனது எஜமானர் வெறுத்தார். இப்படி அடிமையாவதைத்தான் கட்டப்பொம்மு கண்டித்தார்—இதனால்தான் மருது சகோதரர்கள் வீரமுழக்கம் எழுப்பினார்கள்.

(16-ம் பக்கம் பார்க்க)

# நமது குரல்

[மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [25 8–57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 6


புதியதோர் கட்சி, பத்தாண்டுகளுக்குள் வளர்ந்துள்ள கட்சி, அதன் சார்பில் இரண்டு பேர் வந்துள்ளனராமே, என்னசொல்லப்போகின்றனர், என்கிற ஆர்வமும் ஆசையும் நமது **சம்பத்தையும் தர்மலிங்கத்தையும்** காணும் பாராளுமனறத்தினருக்கு ஏற்படுவதாக எழுதியிருந்தார் டில்லி 'மெயில்' நிரூபர்! ஐநூறுக்கு மேற்பட்டோர் அங்கம் வகிக்கும், டில்லிப பாராளுமன்றத்திலே, பேச இடம் கிடைப்பதே, எதிர்க் கட்சியினருக்குப் பெரியதோர் பாக்கியமாக உளதெனினும், இந்தக் கிழமை உள்நாட்டு விவகாரத்தில் சம்பத்து கலந்துகொண்டு, கொளகை முழக்கம் எழுப்பியிருக்கிறார்!! ஐயம் கொண்ட கண்கள் நம்மை அறியவும், இந்தியத் துணைக்கண்டத்துப் பிரதிநிதிகள் நமது தேசிய எழுச்சியை உணரவுமான வகையிலே, வாழ நாடிருந்தும் இலங்கைக்கு ஓடி ஒடிந்த உள்ளத்துடன் திரும்பும் ஏழைத் தமிழனின் கண்ணீரையும் — இந்தி ஏகாதிபத்தியக்காரர்கள், சாகசத்தாலும், சாமர்த்தியத்தாலும் தமிழை அழிக்கச் செய்யும் சதியையும்—'தமிழ்நாடு' என்கிற பெயரினைக்கூட இடமறுக்கும் போக்கினையும் எடுத்துக் காட்டி, "இந்தியா பலமொழி பேசுவோரின் இடம் மட்டுமல்ல ; பல நாடுகளைக் கொண்ட ஒரு துணைக் கண்டம்," எனும் கருத்தினையும், விளக்கியிருக்கிறார். இந்தியா, பல்நாடுகளடங்கியது!—என்று சம்பத்து கூறியபோது. பலர், 'இல்லை! இல்லை!' என்று கூறினராம். சம்பத்தின் குரல், பிறரது குரலையும் தாண்டி நேருவின் காதில் ஒலிக்கக் கூடியது என்பதை நாம் அறிவோம்! ஒலியை வைத்து மட்டுமல்ல, அதில் பொதிந்துள்ள பொருளை, வடநாட்டுக் காங்கிரசினர் அறிய முடியாதெனினும், நேரு அவர்கள் நன்றாக உணர்வார். எவரெவர், "இல்லை! இல்லை!" என்று கூவினரோ, அவர்களையே கூப்பிட்டு, "ஐயன்மீர்! நீர் யார்?", என்று கேட்டால் "நான ஒரு இந்தியன்," என்று எவரும் கூறார். கதருடையிருக்கும்! நேருவின் பதக்கம் மார்பில் மின்னும்!! ஆனால், நான் ஒரு வங்காளி—நான் பஞ்சாபி—நான் மராட்டியன்—நான் அஸ்ஸாமி—என்று தான் ஒவ்வொருவரும் விடை தருவர்.

"இந்தியா, ஒரு நாடு அல்ல. இது பல்வேறு தேசீய இனங்களைக் கொண்டது", என்பதை அடியோடு மறைத்துவிடப் பெரிதும் முயலுகின்றனர். டில்லியினர். அதனாலேயே, "இங்கு பல மொழிகள் இருக்கின்றன. அவ்வளவுதானே ஒழிய, இந்தியா என்பது ஒரே நாடுதான்," என்று எடுத்துக்காட்ட முயலுகின்றனர். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படும் இதயக் குமுறலையும், அதிருப்திப் போரையும் வெறும் மொழி கிளர்ச்சி என்றே பட்டம் சூட்டி வருகின்றனர். "இது தவறு! இந்தியா, பல நாடுகளைக் கண்ட ஒரு உபகண்டம். வீணாக இதனை, ஒரே நாடு என்று சொல்லி, நேரத்தையும் நினைப்பையும் வீணாக்காதீர்," என்று சம்பத்து முழக்கியிருக்கிறார். ஒரே நாடு எனின், அதற்குரிய லட்சணங்கள் வேறு! கரடி, புலி, சிங்கம், பூனை, நரி முதலியவைகளைப் போட்டு அடைத்த ஒரு சர்க்கஸ் கூடாரம் போல், இந்திய உபகண்டம் காட்சி அளிக்கிறதே ஒழிய, ஒரே இனத்தவர் வாழும் இடம்போல அல்ல.

இமய முதல் குமரிவரை 'மெஜாரிடி'யாக யிருப்பது இந்துக்கள்தானே! அப்படியிருக்கும்போது, இந்தியா, ஒரே நாடுதானே!!--என்று வாதிடக்கூடும். பலர், இப்படித்தான் இன்னும் கருதிக்கொண்டும் உள்ளனர். மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், ஐரோப்பாகூட ஒரே நாடுதான் — எங்கேயோயிருக்கும் அமெரிக்காகூட ஐரோப்பாவுடன் இணைந்து வாழவேண்டிய நாடுதான். ஏனெனில், அங்கு எல்லாம் இருப்பது, இயேசுநாதரின் கிருஸ்துவ மதம்தான்! எனினும் பிரான்சு இல்லாமலில்லை, ஜெர்மனியும் இத்தாலியும், கிரேக்கமும் பெல்ஜியமும், ஸ்பெயினும் போர்ச்சுகலும், நார்வேயும் ஸ்வீடனும், பின்லந்தும் ஸ்வீசும் இல்லாமலில்லை. எனவே, ஒரே நாடு என்பதற்கு, மதம் அல்ல அளவுகோல்! அதன்பழக்க வழக்கம், பழைய நாள் வாழ்வு, இலக்கியம். பண்பாடு இவை யாவும் ஒன்றாகயிருக்கவேண்டும் — அப்படிப்பார்த்தால் இந்திய உபகண்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வோர் முறையிருப்பது விளங்கும். பிற பகுதிகளைவிட தென்னகம், தனியானதோர் பண்பாடும வாழ்க்கையும் கொண்டதாகும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் எனும் நான்கும் திராவிட மொழிகள் என்பதும் இவைகள் எப்போதும் வடக்கிலிருந்து தனித்தே இயங்கின என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

வடவர்கள், 'இல்லை! இல்லை!' எனக் கூறியதற்குக் காரணம், அவர்களில் பலபேருக்கு, ஏக இந்திய வெறி இருக்குமளவுக்கு விவேகம் இன்னும் ஏற்படாததேயாகும். நேரு அவர்கள், ஏக இந்தியா என்று பேசிடினும், இந்த உண்மையை உணர்வார்! எனினும் மாபெரும் உபகண்டத்துக்கு மகிபராயிருக்கவேண்டும், முப்பத்து கோடி மக்களுக்கும் முடிசூடா மன்னராக விளங்கவேண்டும் எனும் ஆசை

யால், மறுக்கிறார்! இந்த ஆசை அவர் போன்றார்க்கு இருக்கக் காரணம், சுதந்திரப் போரில், வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்கும் ஒரே கொடியின் கீழ் நின்று போரிட்டதுதான். அப்போது ஏற்பட்ட பந்தமும் பாசமும், 'ஒரே இந்தியா'வை உருவாக்கிவிடும் என்று எண்ணினார்கள். கட்சிக்கட்டுப்பாடு காரணமாக 'ஏக இந்தியா' தெரிகிறதே ஒழிய, பந்தமும் பாசமும் உளதா எனின் நிச்சயமாக இல்லை எனல் வேண்டும்! பஞ்சாபிக்கு பஞ்சாபிமீது ஏற்படுகிற பற்று, வங்கத்தார்மீது ஏற்படுவதில்லை; வங்கத்தாருக்குத் தம்மவர்மீது உண்டாகும் ஆசை அஸ்ஸாமியரிடம் ஏற்படுவதில்லை. இப்படித்தான் ஒவ்வொரு இடத்திலும் உள்ளது! இந்த வேற்றுமைகளுக்கிடையே, வெள்ளைக்காரனைப்போல், ஒரு ஐக்கிய அரசை உண்டாக்கலாம் என்கிற கனவு இன்னும் நேரு போன்றவர்களுக்கு இருக்கிறது. இப்படித்தான் பல நாடுகளையும் வென்ற ரோம் நாட்டு மாவீரன் சீசர் கனவு கண்டு தோற்றான்! ஹிட்லரும், ஐரோப்பாவையே ஒன்றாக்கவேண்டுமென்று எண்ணி, செத்தான்! நினைப்பை பெரிதாக்கிக் கொண்ட **நெப்போலியனும்** முடிவில் முறியடிக்கப் பட்டான! வட்டாரத்துக்கோர் அரசியல், இனத்துக்கோர் நாடு—என்பது, இருபதாம நூற்றாண்டின் அரசியல் கோட்பாடாகும். இப்படிப் பிரிந்த நாடுகள் வேண்டுமானால், உறவும் நேசமும் கொண்டு 'ஐ. நா. சபை' அமைத்துக்கொண்டு வாழக் கூடும—உலகம் தழைக்க, வாழவும இயலும்!—அதை விட்டுவிட்டு பல்வேறு பழக்க வழக்கங்கள் உடையோரை, பல்வேறு பண்பாடுகள் கொண்டோரை ஒரே கூண்டில் அடைத்துவைக்கும் சர்க்கஸ்வித்தை நெடு நாட்களுக்கு நீடிக்காது. இதை உணர்ந்தாலும், தன்னகம் ஒரு தனிப் பண்பாடு உடையது என்பதாலுமே தி. மு. க. தனிநாடு கோருகிறது. சம்பத்தும், பார்லிமெண்டிலே அதை எதிரொலித்தார்! மாற்றுக் கருத்துக்கொண்டோர் ஏராளம் உளோம் எனும் துணிவில், "இந்தியா ஒரே நாடு தான்—பல நாடுகளைக் கொண்டது அல்ல அல்ல" என்று கூச்சல் போட்டிருக்கின்றனர். இது ஆர்வத்தாலும், இவ்வளவு பெரியதை இழபபதா என்கிற கோபத்தாலும் உண்டாகிற காய்ச்சலே ஒழிய உண்மையை உணர்ந்ததால் ஏற்படுவது அன்று. வடக்கில் பலருக்கு நமது ஒளியின் சிதர்கள் கூட இன்னும் எட்டவில்லை! இதுகாறும், இருட்டடைப்புக்குள்ளேயே இருத்தப்பட்டோமென்பதால், நமது குரல் வியப்புக்குரியதாகவே தோன்றும்! வடநாட்டில் என்ன, முப்பதாண்டுகளுக்கு முன்பே இங்கேயே முதன் முதலில் நம் குரல் கேட்டபோது, நடுங்கியல்லவா போயினர் பலர். அறிவொளி பூத்திட்ட இங்கேயே இன்னும் சிலர், ஏறுமாறு பேசும் நிலையில் உள்ளனர் என்றால், வெறும் மத உணர்ச்சியும், ஆத்திர உள்ளமுமே கொண்ட வடவர் அவ்வளவு எளிதிலா உணர்ந்து விடுவர்?

எவ்வளவுதான் இந்திய ஒற்றுமையை பேசிடினும் சந்தர்ப்பம் வரும்போது, தாம்வேறு, தமது கலைவேறு என்பதை ஒவ்வொருவரும் சொல்லிக் கொள்ளவே நேருகிறது. சென்னையில் 'முத்தமிழ் வித்தகர்கள்' மூவருக்குப் பதக்கமளித்த விழாவில் நமது நிதியமைச்சர் சுப்ரமணியம் பேசியபோது சொன்னாராம், "வர்ணஜால மின் விளக்குகளை மரத்தின் மீது தோரணமாகத் தொங்கவிடலாம். ஆனால் இயற்கையான புஷ்பாலங்காரமாகிவிடாது. வேறு புஷ்பங்களைப (அவர் மொழி இது!) பறித்து வந்து கிளைக்குக் கிளை சொருகலாம. அவை சில மணி நேரத்தில் வாடிவிடும். காகிதப் பூக்களைச் செய்து அழகாகக் கட்டலாம். ஆனால் அவை மணக்காது. மரத்துக்குரிய மலர் பூத்தால்தான் மணமும் உண்மை அழகும் உண்டு. கலை, என்பது மலர் போனறது. **நம் பண்பாடு** என்கிற மரத்தை ஒட்டியே அமமலரும விளஙக வேண்டுப" எனபதாக.

**நம் பண்பாடு!**—என்கிறார், அமைச்சர். உண்மைதான், அரிசியோடு கோதுமையையும் கலந்து சமைத்தால் அது அரிசிச் சோறாகிவிட முடியாது—தமிழோடு இந்தியையும் கலந்தால், அது தமிழ் மொழிக்கு அழகு தருவதாக ஆகாது. எவ்வள்வுதான் சர்க்கரையைச் சேர்த்தாலும, ருசிகளைச் சேர்த்தாலும், அரிசியும் கோதுமையும் கலந்து ஆக்கிய பண்டம் ஒரு கதம்பம் ஆகுமோ அதுபோல வடநாட்டினரின் பழக்கவழக்கம், மொழி முதலியவைகளை நாம் சேர்த்து ஐக்கியமாக்கிக்கொள்ள இயலாது. அமைச்சர் கூறுவதுபோல ஒட்டு வேலைகள் ஆயிரம் செய்யலாம! அதனால் மணம இருக்காது; அந்தந்த **பண்பாடு** எப்படியோ அப்படித்தான் நாடு இருக்க வேண்டும. ரோஜாச் செடியில் ரோஜா தான் பூக்க வேண்டும்! முல்லையும் சேர்ந்து பூக்க வேண்டும் என்றால் முடியுமா?

வடநாடு, தென்னகம் இரண்டின் பண்பாடும் வேறு! இரண்டின் தாய்மொழிகளுமவேறு-நடையுடை பாவனை—பண்பாடு எல்லாமே வேறு!! இருந்தும, 'ஏக இந்தியா' எனும் ஆசைக் கனவுககாக ஒட்டு வேலை போடுகின்றனர். சாமந்தி, இருவாட்சி, மல்லிகை, முல்லை, மா, பலா, தென்னை முதலியவை நிரமபியவைகளைப் பொதுவாக ஒரு தோட்டம் என்றுதான் சொல்லுவோம். மாமரம் இருப்பதற்காக அதை மாஞ்சோலை என்று கூறிவிட இயலாது! அதுபோல, இந்தியா என்பதும் பல் நாடுகள கொண்ட ஒரு உபகண்டமே ஒழிய—ஏக நாடு அல்ல!! இப்படி ஏக நாடாக, வெள்ளையன், அவன் ஆதிக்கத் தர்பாருக்காக அமைத்தான. அதையே தொடர்ந்தும் வைத்திருக்கக் காங்கிரசினர் கருதுவது, தவறு. இருபதாம் நூற்றாண்டிற்கு ஏற்றதுமல்ல, எப்போதும் நிலைக்கக்கூடியதுமல்ல! இந்த **அடிப்படையினை** உணர்வது, வடநாட்டுக் காங்கிரஸ் புரியினருக்கு, எளிதல்ல. இப்போதுதானே, "நாம்" இருப்பதே தெரிகிறது' போகபபோக, ஒளி அதிகமாகி, இருட்டு விலகி, நம் குரலின் நியாயத்தை உணர்வர் என்று நம்புகிறோம்—எவ்வளவோ பிகுவும் பிடிவாதமும் செய்த வெள்ளையனே, ஒருநாள், தான் இந்தியா மீது ஆதிக்கம் செலுத்துவது தவறு என்று உணரவில்லையா? அந்த உணர்வு, என்றாவது ஒரு நாள், வடவருக்கும் ஏக இந்தியா ஆசை கொண்டவர்களுக்கும் ஏற்படாமல் போகாது. அது, ஏற்பட, நம் சக்தி அதிகமாகவேண்டும்! நம் குரல், பலருக்குக் கேட்கும்படிச் செய்யவேண்டும்!!—அந்த வகையில், நாம் சட்டசபைகளுக்கும் பாராளுமன்றங்களுக்கும் செல்லவேண்டுமெனறு செய்த முடிவு, பலன் தந்து வருகிறது—உலகெலாம், நம்மைப் பற்றிய ஒளியும் பரவி வருகிறது.

★

# 1967

*சென்ற இதழ் தொடர்ச்சி*

---

சட்டசபைக்குப் போகின்றவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் மூன்று காரியங்கள் அவர்களுக்கு இருக்கிகின்றன. தொகுதியினுடைய முன்னேற்றத்தைக் கருதிக் கொள்கையையும் விட்டுவிடக்கூடாது. கொள்கையை மட்டும் மனதிலே வைத்துக்கொண்டு தொகுதி எக்கேடு கெட்டாலும் எனக்குக் கவலையில்லை என்றும் இருக்கக்கூடாது. தொகுதியையும் பார்த்து சட்டத்தைப் பற்றிய விவாதத்திலேயும் கலந்துகொண்டு திராவிட முனனேற்றக் கழகத்தினுடைய அடிப்படைக் கருத்துக்களை இழந்துவிடக்கூடாது. இந்த மூன்றையும் ஒருசேர நடத்திக்கொண்டு செல்வதுதான் பக்குவமான பாராளுமன்றப் பண்பு. அதைத் திராவிட முனனேற்றக் கழகம், இதுநாள் வரையில் சரியான முறையில் நடத்திக்கொண்டு வருகிறது என்பதுதான், அரசியல் வட்டாரத்திலே அனுபவபபட்டவர்கள் எங்களிடம் எடுத்துச் சொல்லியிருப்பது—நாங்களும் மனதார நம்பி இருப்பது. அங்கு கொண்டு வரப்படுகினற எந்த விவகாரமானாலும், எந்தச் சட்டங்களானாலும், அவைகளிலே இருக்கினற நெளிவு சுளிவுக்கு ஏற்றபடி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தரத் தயங்குவதில்லை. கருத்துக்களைத் தருகின்ற நேரத்திலேயும் அவர்கள் அதற்கான மாற்று நோக்கங்களையும் சொல்லாமலிருக்கவில்லை. அதே நேரத்தில் காரணமற்று காங்கிரஸ்காரர்களை பகைத்துக் கொள்வதில்லை.

நீங்கள் கூர்ந்து பார்த்தால் தெரிந்திருக்கும்—எல்லா விவாதங்களிலேயும் எதிர் தரப்பிலே இருந்து பேசிய தி. மு. கழகம் இரண்டே இரண்டு பிரச்சினைகளிலே தான் ஓட்டுக்கு விட வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். மற்றவைகளிலெல்லாம் அவர்களுக்குப் பெரும்பான்மை இருக்குமென்று எங்களுக்குத் தெரியும—நாங்கள் 15 பேர்தான என்பது உலகறிந்த உண்மை—ஆகையினாலே கணக்கிடு என்று கேட்கவில்லை. அந்த இரண்டு பிரச்சினைகளிலே கணக்கெடுக்கச் சொன்னதற்குக் காரணம், இது எங்கள் கட்சிக்கு சம்மந்தப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல, நாட்டுக்குச் சம்மந்தப்பட்ட பிரச்சினை என்பதாலே நாங்கள் ஓட்டெடுக்கச் சொன்னோம். அதிலே ஒன்று இந்த நாட்டுக்குத் "தமிழ் நாடு" என்று பெயர் வைக்கவேண்டும் என்ற பிரச்சினை. அதன் பேரில் அதற்காக நாங்கள் கொடுத்த வெட்டுப் பிரரேபணையில் எல்லா நண்பர்களும் பேசியான பிறகு, அதற்குக் காங்கிரஸ்காரர்கள் மறுத்துப் பேசியான பிறகு, சட்டமன்றத் தலைவர் எழுந்து, இந்த வெட்டுப் பிரேரேபணையை நீங்களெல்லாம் வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறீர்களா, என்றார். நான் தி. மு. கழகத்தின் சார்பில் எழுந்து சொன்னேன். "எல்லா வெட்டுப் பிரேரேபணையையும் நான் வாபஸ் வாங்கிக்கொள்ளுகின்றேன். "தமிழ் நாடு" என்று பெயரிடும் பிரேரேபணையை மட்டும் நான் வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை—அதன்பேரிலே ஓட்டெடுக்க வேண்டும்" என்று கேட்டேன். கம்யூனிஸ்டுகளும் ஆமென்றார்கள். சோஷியலிஸ்டுகளும் ஆம் என்றார்கள். பிரஜா சோஷியலிஸ்டுகளும் சரியென்றார்கள். காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியினர், சுயேச்சையாளர்கள் எல்லோரும் ஆமென்றார்கள். ஓட்டெடுத்தால் எதிர்தரப்பிலே இருந்த அத்தனை பேரும் "தமிழ் நாடு" என்ற பெயர் தேவை என்பதற்காக எழுந்து நின்றோம். காங்கிரஸ் தரப்பிலே இருந்த 150 பேரும் "தமிழ் நாடு" வேண்டாம் என்பதற்கு எழுந்து நின்றார்கள்.

> மதுரையில் 11—8—57-ல் ஞாயிறு காலை 10-மணிக்கு சி. என். ஏ. ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவின் பிற்பகுதி தரப்படுகிறது.

ஏன் நாங்கள் அது ஒன்றின் பேரிலே மாத்திரம் ஓட்டெடுத்தோம்? எங்களுக்குத் தெரியும் தோற்றுவிடுவோமென்று. ஆனால் யார் யார் தமிழர், தமிழ் நாட்டிக்குத் "தமிழ் நாடு" என்று வேண்டாமென்று சொல்கின்றவர்கள் என்பதை நாடு பார்க்க வேண்டாமா? நம்முடைய மதுரையம்பதி உறுப்பினர் இருக்கின்றாரே—நண்பர் சங்கரன், அவர்கூட எழுந்து நின்றார். அவர் எழுந்து நிற்பதற்கு

# எதிர்காலத்தை எழுதுவது நாம்

இரண்டு நாட்களுக்கு முன்னாலேதான் எங்களுக்குக்கூட புத்தி சொன்னார்—தமிழ், தமிழ் நாடு என்றாலே இவ்வளவு தீவிரமாகப் பேசுகின்ற இந்த தி. மு. கழகத்தார் தங்களுடைய கழகத்தின் பெயரை தமிழ் முன்னேற்றக் கழகம் என்று மாற்றிவிடக்கூடாதா—என்று. அப்படி எங்களுக்குச் சிபாரிசு செய்த நமமுடைய நண்பர் சங்கரன் அவர்களும் எழுந்து நின்றார். நானகூட அவரைப் பார்த்து, அவர் நின்றபோது, என்ன கம்பீரமாக நிற்கின்றாரா இல்லையா எனறு பார்த்தேன். தலை குனிந்துதான் நின்றார்! ஏனென்றால் அவருக்குத் தெரியுமல்லவா, தமிழ நாட்டிலே பிறந்து, அவர் தொட்டிலிலே படுத்த காலத்திலே பேசியது தமிழ் மொழி—அவர் இனறைய தினம் கட்டிலிலே பேசுவதும் தமிழ் மொழி! கோர்ட்டிலே பேசுவது வேண்டுமானால் ஆங்கிலமும் தமிழும் கலந்ததாக இருக்கலாம். அப்படிப்பட்டவர், இந்த நாட்டுக்குத் தமிழ் நாடு என்ற பெயர் வேண்டாமென்று கட்சிக் கட்டுப்பாட்டுக்குத் தானே எழுந்து நின்றார்? அவர் எழுந்து நினறது கூட அவ்வளவு ஆச்சரியமில்லை. தமிழருடைய எல்லையில் ஒரு ஆங்கிலம் குறையக்கூடாது என றெல்லாம் பாடுபடுகின்றவர், நண்பர் விநாயகம் அவர்கள் அவரும் எழுந்து நின்றாரே! அவர் எழுந்து நினறபோதுகூட நான் திருமபிப் பார்த்தேன-"ஏனய்யா நீ கூடவா? என்றேன். அவர் என்னை திரும்பிப் பார்த்தால்தானே!

வயதான ஒரு கணவனுக்கு இளம் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்தால், அந்த இளம் பெண் கணவனின் முகத்தை உற்று பார்த்துக் கொண்டிருப்பாள்? தரையிலேயே பார்த்துக் கொண்டிருப்பதைப் போல், பாவிகள் நம்மை இபபடியெல்லாம் அலட்டி வைக்கிறார்களே என்று எணணிக் குனிந்து கொண்டார்கள். நாங்கள எல்லாம் நிமிர்ந்து பாாத்துக்கொண்டோம். தமிழன் தனனுடைய நாட்டுக்கு "தமிழ் நாடு" என்று தானே பெயர் வைப்பான் என்று காட்டுவதற்கு எழுந்து நின்றோம். தமிழ் நாட்டுக்கு "தமிழ் நாடு" என்று பெயர் வைப்பதுகூட வேண்டாமென்று சொல்லுகிற தமிழர்கள் இவ்வளவு பேர் இருக்கிறோமே என்ற வெட்கத்திலே அவர்கள் எழுந்து நின்றார்கள். ஆகையால் காமராசரை உட்கார்ந்துகொண்டே கேட்டேன், "தமிழ் நாடு வேண்டாமென்று சொல்லுகிற தமிழர்கள் இவ்வளவு பேரை அழைத்துக் கொண்டு வந்தீர்களே, நல்ல சாமர்த்தியசாலி ஐயா நீங்கள்!" என்றேன். அதற்கு அவர் "பரவாயில்லை பார்க்கலாம், பார்க்கலாம்" என்றார்.

அந்தப் பிரச்சினையிலே ஓட்டெடுத்ததாலே என்ன சாதித்துவிட்டீர் என்று கேட்கலாம். பெரியார் இராமசாமிகூட இப்படிக் கேட்பதாக நான் கேள்விப்படுகிறேன். என்னவோ இந்தப் பயல்கள், நான் இவ்வளவு எதிர்த்தும் என் பேச்சைக்கூடக் கேட்காமல் உள்ளே போய்விட்டார்களே. என்னத்தைச் சாதித்தார்களாம்?" என்று.

நாங்கள் உடனடியாக எதையும் சாதிக்கவில்லை. எதைச் சாதித்தோமென்றால் தமிழ் நாட்டு வரலாற்றில் ஒரு புது அத்தியாயத்தை எழுதிஇருக்கிறோம். அது இப்போது தெரியாது — நமமுடைய பேரன் படிக்கப் போகிறான். அவன் படிக்கிறபோது ஒரு பக்கத்தில் இந்த நாட்டுக்குச் சென்னை என்று பெயரிருந்தது என்று எழுதி இருக்கும். அவன பக்கத்திலே இருக்கிற நண்பனைப் பார்த்துக் கேட்பான்—நமமுடைய பெரியவர்கள் பார்த்தாயா எவவளவு பைத்தியக்காரர்களாக இருந்திருக்கிறார்கள், நம் நாட்டுக்கு மதராஸ் என்று பெயராமே, ஏன் என்று கேட்பான். இல்லை இதற்குத் தமிழ்நாடு என்றுதான பெயர்—மெட்ராஸ் என்று பெயரிட்டார்கள்—பிறகு தமிழ் நாடு என்று மாற்றிப் பெயரிட்டார்கள்.

"அப்படி மாற்றுவதற்கு யார் பாடுபட்டவர்கள்?"

"இன்னின்னார் பாடுபட்டார்கள்"

"எந்த முறையிலே பாடுபட்டார்கள்?"

"சட்ட சபையிலே தீர்மானம் கொண்டு வந்தார்கள்?"

"கொண்டு வந்தபோது மெஜாரிடி கிடைத்ததா?"

"கிடைக்கவில்லை!"

"யார் யார் வேண்டும் என்றார்கள்?"

"15-பேர் வேண்டும் என்றார்கள்."

"யார் யார் தமிழ்நாடு வேண்டாமென்றார்கள்?"

"150-பேர் வேண்டாம் என்றார்கள்"

"தமிழ்நாடு வேண்டாம் என்ற தமிழன்கூடவா அந்தக் காலத்தில் இருந்தான்?"

"ஆமாம் ஐயா! இருந்தான்"

"அவன் இப்போது எங்கே இருக்கிறான்?"

"அவர் இப்போது இல்லை அவருடைய பேரன் அதோ பார் இருக்கிறான்"

நண்பர்களே நீங்கள் தெளிவாக எழுதி வைத்துக்கொள்ளுங்கள். 15-பேராக இருக்கிற நாங்கள் இந்தக் காலத்து வரலாற்றை எழுதவில்லை — எதிர்கால வரலாற்றை எழுதிககொண்டிருக்கிறோம். கண்ணீரால் எழுதுகிறோம் — எங்கள் இரத்தத்தால் எழுதுகிறோம்—எங்கள் வியர்வையால் எழுதுகிறோம்—அது உலர்வதற்கு பத்து ஆண்டுகள பிடிககலாம், 20-ஆண்டுகள் பிடிக்கலாம்—ஆனால் அந்த வரலாற்றில் எழுதப்படுகின்ற ஒவ்வொரு வாசகமும் எதிர்காலத்தில் நம்முடைய நாட்டினுடைய எதிர்காலத் தலைமுறைக்கு ஏற்படுகின்ற மன எழுச்சிக்கு உறுபடையாக அமையும்.

அதைப்போலவே இரண்டாவதாக நாங்கள் ஓட்டுக்கு விட்டது கைத்தறியாளர் பிரச்சினை, அதறகும் காங்கிரஸ்காரர்கள் எழுந்து நினறார்கள். கைத்தறி நெசவாளர்களது ஓட்டு வாங்கிய காங்கிரஸ்காரர்களும் எழுந்து நின்றார்கள்.

# சாயம் போகாத சரக்கு!

இந்த (தெற்கு) பக்கத்திலிருந்து வந்திருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்களெல்லாம்கூட கைத்தறி நெசவாளர்களைப் பற்றி, கசிந்து கண்ணீர் மல்கிப் பேசினார்கள். அவர்களுடைய நல்ல எண்ணத்தை நான் பாராட்டுகிறேன். நல்ல உணர்ச்சியை நான் மதிக்கிறேன். ஆனால் கட்சிக் கட்டுப்பாடு காரணமாக அவர்கள்கூட எழுந்து நின்று அதற்கு எதிர்த்துத்தான் ஓட்டளித்தார்கள்.

இந்த இரண்டு விவகாரங்களில் மட்டும் நாங்கள் ஓட்டெடுத்தோம். மற்றவற்றில் எல்லாம் ஓட்டெடுக்கவில்லை. இதிலேயிருந்து நீங்கள் தெரிந்துகொள்ளலாம்—தி. மு. கழகத்தினுடைய உறுப்பினர்கள் சட்ட மன்றத்தில் அடிப்படைக் கொள்கைகளை மறக்காமல் பணியாற்றுகின்றார்கள் என்று. அதே நேரத்தில் தங்கள் தொகுதிக் காரியத்தையும் கவனித்துக்கொண்டு வருகின்றார்கள். தொகுதிக் காரியங்களைக் கவனிப்பதற்குத்தான் முதல் அமைச்சர் காமராசரை நான் என்னுடைய தொகுதிக்கு அழைத்துக்கொண்டு போனேன்—சில நாட்களுக்கு முன்னால்! சட்ட சபையிலே இருக்கும்போது ஒருநாள் பேச்சோடு பேச்சாகக் கேட்டேன்—எங்கள் தொகுதிக்கு வருகிறீர்களா என்று. "அதற்கென்ன வருகிறேன்" என்றார். வருகிறேன் என்று அவர் சொன்ன நேரத்திலே அவருடைய மனதிலே ஒரு எண்ணம் இருந்திருக்கக்கூடும் — அந்தத் தொகுதிக்கு போவோம் — யார் யார் இந்த அண்ணாதுரைக்கு உதவி செய்கிறார்கள் என்றும் பார்க்கலாம் — இவர்களுக்கு யார் யார் செல்வாக்களிக்கிறார்களோ, அவர்களை நாமே நேரிலே சந்தித்து நமக்காக அந்த செல்வாக்கைத் தேடிக்கொள்ளலாம் என்ற எண்ணத்திலே அவர் வந்திருக்கக்கூடும்—அதை நான் அறியாதவனல்ல. ஆனால் என்னிடத்திலே இருக்கின்ற சரக்கு சாயம் போகாத சரக்கு என்கிற காரணத்தினால் நீ துவைத்துப் பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டு விட்டேன்.

நான் அவரை அழைத்ததனுடைய காரணம் என்ன—நானோ நான் சார்ந்திருக்கிற கட்சியோ மெஜாரிடி கட்சியல்ல—மைனாரிடி கட்சி. ஆகையால் தொகுதிக்குச் செய்ய வேண்டிய காரியத்தை நாங்களே உத்தரவு போட்டுச் செய்ய முடியாது. யார் கையிலே பேனா இருக்கிறது — உத்தரவு போட வேண்டிய பெருமகன யாரென்பதை எங்களுடைய தொகுதி மக்களுக்குக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையால் நான் அழைத்துக் கொண்டுபோய் அவரை உட்கார வைத்து ஜனங்களுக்குக் காட்டினேன் "இதோ பாருங்கள், இவர்தான் முதல் மந்திரி, இவர்தான் உடைந்துவிட்ட ஏரிக்கரையைச் சரிப்படுத்த வேண்டும், இவர்தான் அந்த மதகை 'ரிப்பேர்' செய்ய வேண்டும் — இவர்தான் வாய்க்கால் உடைப்பை சரி செய்ய வேண்டும்—நீங்கள் வரி கொடுப்பது இவரிடத்திலே தான்—இதைச் செய் என்று கேட்பதுதான் என்னுடைய வேலை — என்ன ஐயா நீங்கள் சொல்லுங்கள்" என்றேன். இது, அந்தத் தொகுதிக்கு சம்மந்தப்பட்டவன் என்ற முறையில் நான் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அந்தத் தொகுதிக்கு நல்ல காரியங்களைச் செய்தால் நானும் மனதாரப் பாராட்டுவேன். அவர் செய்யத் தவறிவிட்டால் என்னுடைய தொகுதி மக்களிடத்திலே மறுபடியும் போய் நான் சொல்லுவேன் "என்னய்யா செய்யச் சொல்லுகிறீர்கள் அவரையும் தான் அழைத்துக்கொண்டுவந்து காட்டினேன். நேரடியாகவே பார்த்தாரே என்பேன். அவர்களே சொல்லுவார்கள் — அந்த மனிதன் அன்று வந்தபோது ஒழுங்காத்தானே பேசினார், ஏழைகளுடைய கஷ்டம் எனக்குத் தெரியுமென்று சொன்னாரே இன்னும் தெரியவில்லையே—என்று அவர்கள் சொல்லுவார்கள். அதற்குப் பிறகு 5-வருஷத்துக்குப் பிறகு தேர்தலில் பதில் அளித்துவிடுவார்கள்.—அது அவர்கள் சம்மந்தப்பட்டது—நான் சம்மந்தப்பட்டதல்ல! ஆகையினாலே அந்தப் பிரச்சினையிலும் நான் கலந்துகொண்டேன்.

அதைப் போலவே இரண்டாவது பிரச்சினையிலும் நான் கலந்துகொண்டேன். அங்கே வருகின்ற சட்டங்களின் பேரில் எங்களுடைய கருத்துக்களைச் சொல்லவேண்டும். இப்போது நடைபெற்ற சட்டசபை நடவடிக்கையைப் பொறுத்தவரையில் புதிதாக எந்தச் சட்டமும் வரவில்லை. புதிதாக ஏதாவது நாட்டு மக்கள் உள்ளத்தினை உலுக்கக் கூடிய சட்டம் வந்தால் தி. மு. கழகத்தினுடைய கருத்துக்கள் அதிலே எடுத்துச் சொல்வதற்கு வழியிருக்கும். இப்போது நாங்கள் செய்திருப்பதெல்லாம்— சத்திரத்திலே இருக்கின்ற ஐயர் பத்து பேருக்குச் சமையல் செய்து இருபது பேருக்கு அதைச் சம அளவில் பங்கிடுகின்ற அந்த முறைப்படி—காமராஜர் வெறும் நிர்வா


விற்பனையாகிறது!

**கவிஞர் கண்ணதாசன்**

எழுதிய

## "உயிர் ஓவியங்கள்"

**விலை ரூபாய் ஒன்று**

விவரங்கட்கு:—

**பி. இராமசாமி அன் பிரதர்ஸ்,**

"முத்து மாளிகை" :: சென்னை-4.

# தியாகமும் தீரமும் தேவை

கத்தை நடத்திக் கொண்டு போகிறார். புதிதாக எந்தச் சட்டத்தையும் இன்னமும் கொண்டுவரவில்லை. ஆச்சாரியார் கொண்டு வந்ததைப்போல் கேடுதருகின்ற சட்டமானாலும் சரி — அல்லது நாமெல்லாம் எதிர்பார்க்கின்றபடி நல்லது தருகின்ற சட்டமானாலும் சரி — நாட்டு மக்களுடைய உள்ளத்தை உலுக்கக் கூடிய ஒரு சட்டம் வருமானால் அந்த சட்டத்தில் நாங்கள் தெளிவாக எங்களுடைய கருத்துக்களை அப்போது எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால் காமராசர் ஆட்சியில் அப்படிப்பட்ட அடிப்படைச் சட்டங்கள் வருமா என்பதில் எனக்குக் கொஞ்சம் ஐயப்பாடு உண்டு. ஏனென்றால் காமராசருடைய கருத்து அத்தனையும், உள்ளே இருக்கின்றவரையில் காலத்தை ஓட்டிக்கொண்டு போகலாம் என்று எண்ணுகின்றவராகத்தான் எனக்குத் தெரிகின்றதே தவிர, நம்முடைய காலத்திலே இதைச் சாதித்தோம்—நம்முடைய காலத்திலே இதை நிறைவேற்றினோம் — என்று சுட்டிக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையோடு அவர் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவரிடத்திலே நான் காணுகின்ற குணமெல்லாம் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும்—நன்மை செய்யலாம்—என்ற அந்த அளவுக்குத்தான் இருக்கிறதே தவிர மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமானால் அதற்கு எதையெதை அடிப்படையிலே மாற்றவேண்டும் என்பதில் அவர் தீவிரமான கருத்தைக் கொண்டவராக எனக்குத் தெரியவில்லை.

**1967** என்பது, நாம் இப்பொழுது நடந்துகொண்டு செல்லுகின்ற பாதையில் நம்மை ஒரு முக்கியமான கட்டத்திற்கு அழைத்துவர இருக்கின்றது— பத்து ஆண்டுக் காலத்தில் நான் உங்களிடத்திலே உள்ளத்தைத் திறந்து சொல்லுகின்றேன்- மாபெரும் போராட்டங்கள் நம்முடைய நாட்டு விடுதலைக்காக நேரிடுவதற்கான சூழ்நிலைகள் உருவாகும், அந்த மாபெரும் போராட்டங்களில் நம்முடைய கழகத்திலே ஈடுபாடு கொண்ட ஆர்வமுள்ள இளைஞர்கள் தங்களை இன்றைய தினம் முதற்கொண்டே பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் சட்டசபையிலேயே உறுப்பினர்களாக இந்தப் பத்து வருஷத்தில் வீற்றிருப்போம் என்று நீங்கள் கருதத் தேவையில்லை. சட்டசபையிலே எத்தனை நாளைக்கு இருப்போம் என்பதும் அந்த ஆர்வம் எத்தனை காலத்திற்கு ஓடுமென்பதும் முன் கூட்டி கண்டுபிடித்து விடமுடியாது! வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தமிழ்நாட்டிலே நடத்தப்படுகின்ற இந்தப் பெரும் அறப்போராட்டங்கள் இந்த 1967 வருவதற்குள்ளே ஏற்படுகின்ற நேரத்தில் ஆர்வமுள்ள திராவிடத் தோழர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுவேன் — இந்த மாமன்றத்திலேயிருந்து—இந்த மதுரையிலே இருந்து—நான் பல பகவத்சிங்குகளை எதிர்பார்க்கின்றேன் — பல திருப்பூர் குமரன்களை அழைக்கிறேன்-பல வ. உ. சிதம்பரனார்களை விரும்பி அழைக்கிறேன். அவர்களைப்போன்றவர்கள் நம்முடைய நாட்டிலே நல்ல தியாக எண்ணம் படைத்தவர்கள் திராவிடத்திலே தோன்றினாலொழிய — அதுவும் இந்தப் பத்து ஆண்டுகளிலே கிடைத்தாலொழிய—இந்தமாமன்றத்திலே நாம் எடுக்கின்ற முடிவின்படி நம்முடைய தாய்த்திருநாட்டை மீட்பதென்பது இயலாத காரியமாகிவிடும். நாம் சாமானியர்கள் — நாம் எடுத்துக் கொண்டிருக்கிற பிரச்னை மிகப் பெரியது—அது எவ்வளவு வலிவு உள்ளவர்களாலும் அழிக்க முடியாத பிரச்சினை — அதற்கு நல்ல தியாக உள்ளம் வேண்டும்—அந்தத் தியாக உள்ளத்தை நாம் பெற வேண்டும் என்றால் மற்ற இடத்தில் உள்ள தியாகிகளை நாம் மதிக்க வேண்டும்—அந்த இடத்திலேதான் நான் காங்கிரசிலே இருக்கின்ற உண்மையான தியாகிகளை என்றைய தினமும் மதிக்கின்றேன். என்றும் அவர்களை நான் போற்றிப் புகழ்ந்திருக்கின்றேன். தடியடிபட்ட காங்கிரஸ்காரர்களை நான் வாழ்த்தி இருக்கின்றேன். சிறைச்சாலைக்குச் சென்றவர்களை நான் போற்றி இருக்கிறேன்! --அவர்களெல்லாம் நாட்டு விடுதலைக்காக தங்களுக்குத் தோன்றிய வழியிலே பாடுபட்டவர்கள். அவர்கள் விடுதலையினுடைய அத்தியாயம் முடிந்துவிட்டதென்று கருதுகின்றார்கள். ஆனால் விடுதலையினுடைய இறுதி அத்தியாயம் எழுதப்படவில்லை என்பதை அவர்கள் இன்னும் தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றார்கள். விடுதலையினுடைய கடைசி அத்தியாயம் திராவிட நாடு விடுதலை பெற்றால்தான் எழுதப்பட முடியும் — அந்த விடுதலை அத்தியாயத்தை எழுதுவதற்கு நீங்கள் தான் தகுதியான

விரைவில் ஆரம்பமாகும்

தோழர் இராதாமணாளன் தீட்டிய

'பாண்டியன் திருமேனி'

உள்ளம் தொடும் தொடர் கதை!

வர்கள்— அதற்காகத்தான் தி.மு. கழகம் உங்களிடத்திலே பாடுபடுகின்றது—ஆகையாலே அந்தத் தியாக உள்ளத்தை நீங்களெல்லாம் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு — அதைப் பெறுவதற்கு நீங்களும் நானும் நல்ல மனப்பக்குவப்பட்டுக் கொண்டு வருகிறோம். அந்தப் பக்குவம் பத்து வருஷத்திலே நல்ல பலனளிக்குமென்று கூறி — 1957-ல் சட்ட சபையை எட்டிப் பார்த்திருக்கின்ற நாம், 1967-ல் சட்டசபையிலேயோ வெளியிலேயோ, டெல்லியிலே இருக்கின்ற அந்த நாட்களிலே அரசாளுகின்றவர்கள் அங்கே நம்மை வரவழைத்தோ அல்லது இங்கேயே அவர்கள் வந்தோ — அல்லது நாம் அங்கே போவது இழுக்கு அல்லது அவர்கள் இங்கே வருவது இழுக்கு என்று கருதி இடை நடுவிலே எங்காவது ஓரிடத்திலே அமர்ந்தோ "திராவிட நாட்டை ஏன் கேட்கிறீர்கள்?" என்று அவர்கள் நம்மைக் கேட்க "இன்னின்ன காரணத்தாலே, கேட்கிறோம்" என்று நாம் சொல்ல அந்தக் காரணங்களிலே இதை ஏற்றுக்கொள்ளலாம் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் சொல்ல—இல்லை நீங்கள் கட்டாயம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நாம் வாதாட — அப்படியானால் திராவிடநாடு பிரிந்த பிறகு நிலைமை எப்படி இருக்கும் என்று அவர்கள் நம்மைக் கேட்க —பிரிந்த பிறகு இப்போது இருப்பதைவிட நேசம் அதிகமாக இருக்கும் என்று நாம் அவர்களுக்கு உறுதி அளிக்க— அதை நாங்கள் நம்பலாமா என்று அவர்கள் கேட்க — பரிபூரணமாக நம்பலாம் என்று நாம் சொல்ல—எதன்மீது ஆணையிட்டுச் சொல்லுகின்றீர்கள் என்று அவர்கள் கேட்க — எங்கள் தமிழ்ப் பரம்பரையின்மீது ஆணையிட்டுச் சொல்லுகின்றோம் என்று நாம் சொல்ல—அப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தம் பேசுகின்ற ஒரு மாமன்றம் கூடுவதற்கு 1967-ல் வழி பிறக்கக் கூடுமானால் உங்களிலே பலபேர் இன்றைய தினம் உழைத்த உழைப்பு அன்றைய தினம்தான் பலன் தரும் என்று நான் கருதுகின்றேன்.

★

# "என்னைப்பற்றி!"

[மா. கி. தசரதன்]

என்னைப்பற்றி என்றவுடன் நான், 'என்னை'ப் பற்றித்தான் எழுதப் போகின்றேன் என்று நீங்கள் நினைத்தால் அது தவறாகாது. ஏனென்றால் 'தன்னைப் பற்றி' எழுதுவதில் யாருக்கும் எப்போதும் சலிப்பே உண்டாகாது. அது மனித இயல்பு.

நம்மைப் பற்றி நாமே எண்ணிக் கொள்வதில், எடுத்துச் சொல்லிக் கொள்வதில் நமக்குப் பெரு மகிழ்ச்சி உண்டாவது வழக்கம். அதனால் இந்தக் கட்டுரை 'என்னை'ப் பற்றியதாக இருக்கக்கூடும் என்று நினைக்கலாம்.

ஆனால் நான் இங்கே 'என்னை'ப் பற்றி எழுதப் போவதில்லை. எழுதுகின்ற அளவுக்கு எதுவும் இல்லை; இருந்தால் எழுதிவிடுவேன். இங்கேயும் பாருங்கள் என்னைப் பற்றி எழுதுவதற்கு ஒன்றுமில்லை என்று சொல்லிக் கொள்ளுவதே என்னைப் பற்றித் தானே! என்ன செய்வது உலகத்தில் அதில்தான் இன்பம் இருக்கிறது!

நன்னூல் ஆசிரியர் தன்னைப் பற்றித்தானே எடுத்துச் சொல்லிக்கொள்ளுவதற்குச் சில இடங்களை வரையறை செய்திருக்கின்றார். தன்னை இன்னான் என்று தெரியாதவர்கள் இருக்கின்ற போது, வாதிடப் புகுகின்ற வேளையில், வேற்றூர் அவையில் 'தான் தற்புகழ்தல் தகும் புலவோர்க்கே' என்று இங்கே எல்லாம் தன்னைப் பற்றி ஒருவன் சொல்லிக்கொள்ளலாம் என அவர் உரிமை தருகின்றார். அவர் சொல்லும் அந்த இடங்களில் தன்னைப் பற்றிச் சொல்லிக்கொள்வது அறிமுகமாகவும் இருக்கும் — வேண்டிய போது அச்சுறுத்தவும் பயன்படும். அதனால்தான் அங்கே மட்டும்தான், தன்னைப் புகழலாம், அது புலவோர்க்குத் தகும் என்று அவர் சொல்லிவிட்டார்.

நாம் புலவர்கள் அல்லர். எனினும் நன்னூலார் சொல்லும் அந்த இடங்களில் நம்மைப் பற்றிச் சொல்லிக்கொள்ளத் தவறுவதில்லை. அந்த இடங்களில் மட்டும்தான் நம்மைப் பற்றிச் சொல்லிக்கொள்ளுகின்றோம் என்பதில்லை. கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். எப்போதும் நம்மைப் பற்றித்தான் நினைப்பு. அந்த நினைப்பு நம்மளவிலே மட்டும் இருப்பதில்லை. மற்றவர்களுக்கும் தெரியவேண்டும் என்று ஆசைப் பட்டுச் சொல்லுகின்றோம்.

"நான்சின்னப்பையனாக இருந்த போது விழுந்தேன் பாருங்கள் ஐயா—எவ்வளவு பெரிய பள்ளத்தில் விழுந்தேன் தெரியுமா" என்று கீழே விழுந்ததைக்கூட ஒரு சிறப்பாகச் சொல்லுகின்றோம். யாராவது ஒரு பள்ளிச் சிறுவன் தவறாக நடக்கின்றான்—ஒழுங்காக இருப்பதில்லை—என்று வைத்துக்கொள்வோம். உடனே பக்கத்தில் இருப்பவர் "நான் கூட இப்படித்தான். சின்ன வயதில் கல்லூரிக்கு வந்தேன். பிறகு அடியோடு மாறிவிட்டேன்" என்றாவது "இவன் என்ன இப்படி இருக்கின்றானே—நான் சின்ன வயதில் எப்படி இருந்தேன் தெரியுமா?" என்றாவது தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வார்.

"நம்ம வீட்டிலே ஐயா இன்றைக்கு பிஞ்சுக் கத்தரிக்காய் எண்ணெய்க் குழம்பு" என்று சொல்லிக் கொள்வதிலே மனதில் ஒரு திருப்தி. "நம்ம பையன் படுத்துகின்ற பாடு சொல்லி முடியாது ஐயா, கொண்டுவா குதிரை பொம்மை என்கிறான். எதைக் கொடுத்தாலும் இது வேண்டாம் வேண்டாம் என்று தள்ளி விடுகின்றான் — ஒருவேளை தேசிங்கு ராசனைப்போல் குதிரை வீரனாக இருப்பானோ என்னவோ!" என்று தன் மகனுடைய 'திருவிளையாடலை' மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

எங்காவது நான்கு பேர் கூடியிருக்கிற ஒரு இடத்தில் யாரா

வது ஒருவர் ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டியதுதான். உடனே மற்றவர்கள் 'நானும் அப்படித்தான்' என்று சொல்லத் தவறுவதில்லை.

'என்னை'ப் பற்றி மட்டும் சொல்லிக்கொண்டால்கூட எவ்வளவோ மேல். முதன் முதலில் 'என்னை'ப் பற்றிப் பேச்செடுப்பவர் படிப்படியாக அவருடைய மனைவி, மகன், வீடு, வீட்டில் உள்ள பொருள்கள், ஊரில் உள்ள சீரும் சிறப்பும் இவைகளைப் பற்றியெல்லாம் சொல்லத் தொடங்கிவிடுகின்றார்கள். அதுவும் மிக அதிகமாகச் சொல்லிக் கேட்போருடைய செவிகளைத் துளைக்கின்றபோதுதான் மற்றவர்களுக்கு அது தவறாகப் படுகின்றது. அதுவரை அவர்களும் வாயைப் பிளந்துகொண்டு "ஊம்—அப்புறம்—" என்றுதான் பாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

மனிதனுக்குத் தன்னைப் பற்றித்தானே சொல்லிக்கொள்வதில் இருக்கும் மகிழ்ச்சியைப் போலவே தன்னைப் பற்றிப் பிறர் சொல்வதைக் கேட்கவேண்டும் என்றும் ஆசை உண்டாகின்றது. ஆனால் மற்றவர்கள் எடுத்துச்சொல்வது வெறும் புகழ்ச்சியாக மட்டும் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றான்.

கண்ணன், மணியைப்பற்றி முருகனிடத்தில் மணி இல்லாத போது "மணி எவ்வளவு நல்லவன் தெரியுமா—தங்கக் கம்பி" என்று சொன்னான் என்பதை கேட்கும்போது மணிக்குக் கோபம் வருவதில்லை. ஆனால் "அவனும் ஒரு மனிதனா" — என்று சொன்னான் என்றால் போதும் 'நான் இல்லாத இடத்தில், என்னைப்பற்றிப் பேச இவன் யாரையா?" என்று கோபம் கொள்ளுவது வழக்கம்.

புகழ்ச்சியைத் தாங்கிக்கொள்வதில் மனதிற்கு மகிழ்ச்சி—விருப்பம் எல்லாம் உண்டு. அதனால் தான் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் அவர்களை முகமன் —முகஸ்துதி— செய்து மகிழ்விக்க முடியும் என்று உலகம் நம்பிக்கொண்டிருக்கிறது.

"நீங்கள் மிகவும் நல்லவர்—முகமன் என்றால் உங்களுக்குத் துளிகூட பிடிக்காது என்பதை நான் அறிவேன்" என்று ஒருவரிடம் சொல்லிப் பாருங்கள் உடனே அவர் இதழ்களைக் காதுவரை விரியச்செய்து 'ஆமாம்' என்பது போல் தலையை மேலும் கீழுமாக ஆட்டி முகமனுக்கு இரை ஆகி விடுகின்றார். முகமனை விரும்பாதவரையே 'வசியம்' செய்யக் கூடிய ஆற்றல் முகமனுக்கு இருக்கின்றது. அதற்கு எளிதில் இரையாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே ஒரு புலவர்,

வழிபடு வோரை
வல்லறி நீயே

வழிபாடு செய்கின்றவர்களை உன்னை முகமன் கூறுகின்றவர்களை நன்றாக ஆராய்ந்து உண்மையை அறிந்துகொள் என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

என்றாலும் உலகம்—தமிழர்கள்—அதைக்கேட்டு நடக்கவில்லை. வழிபட்டவர்களை எல்லாம் வல்லறிய முற்படாமல் அவர்கள் காட்டிய வழியெல்லாம் சென்று சென்று இடரும் இன்னலும் பட்டு இழிநிலை எய்தினர்—இந்த வரலாறு ஒருபுறம் இருக்கட்டும்.

மனித மனதில் இருக்கும் தன்னைப்பற்றிச் சொல்லிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை யாரையும் விட்டதில்லை என்பதை முன்னே பார்த்தோம். யாரையும் என்று பொதுவாகச் சொல்லி விட்டாலும் 'இந்த எழுத்தாளர்கள்' இருக்கிறார்களே அவர்கள் இயல்பு என்ன என்பதைப் பார்க்கலாம்.

அவர்கள்தான் மற்றவர்களை விட தங்களைப்பற்றி எழுதிக் கொள்ளுவதில் மிக்க விருப்பம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இங்கிலாந்து நாட்டில் சார்லஸ் லாம்ப் என்ற ஒரு எழுத்தாளர் இருந்தார். அவர் படித்தது வேலைக்குப் போனது — சாப்பிட்டது—மணமில்லாமல் இருந்தது —நண்பர்களுடன் பேசியது இதையெல்லாம் ஒன்றுவிடாமல் எழுதிவைத்தார். 'சுயசரிதம்' என்று சொல்லப்படும் 'தன் வரலாறு' முறையிலே அல்ல. தனித்தனிக் கட்டுரைகளாக 'ஈலியா' என்ற புனை பெயரில் ஒளிந்துகொண்டு. அவர் மட்டும் அல்ல — எந்த எழுத்தாளரும் தன்னுடைய சொந்த அநுபவங்களை—சூழ்நிலைகளை—மன இயல்புகளை — நிகழ்ச்சிகளை — விருப்பங்களை — இவற்றை எப்படியாவது தன் எழுத்தில், படைப்பில் கலந்தளிக்கின்றார்கள் என்பதைப் பலர் அறிவர்.

தன்னைப்பற்றித் தானே சொல்லுகின்றபோதும் சரி, பிறர் சொல்லுகின்றபோதும் சரி, நல்லவைகளை மட்டும் — புகழ்ச்சியை மட்டும்—விரும்பி நாடுகின்ற மனம் தனனிடம் உள்ள நல்லன அல்லாதனவற்றை—இகழ்ச்சியை—நெருங்கக் கூசுகின்றது.

தன்னிடம் உள்ள குறையை உணருதற்கு அஞ்சி நடுங்கி விலகி விலகிப் போய்விடுகின்றது மனம் —மற்றவர்கள் எடுத்துச் சொன்னாலும் அவர்கள்பால் சினங் கொள்ளச் செய்கின்றது. இதனை வரும் கேடுகளை உணர்ந்தால் நல்லது, திருந்த இயலும்.

தன்னுடைய குற்றங்குறைகளை எண்ணிப் பார்க்கின்றபோது இருக்கும் அநுதாப உணர்ச்சி பிறர் குற்றங்குறைகளை எண்ணிப் பார்க்கின்றபோதும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் உண்மையான குறைகளை மட்டும் காணமுடியும். இன்றேல் குற்றம் அல்லாதனவும் குறைகளாகத் தோன்றும்.

அதேபோல் பிறர் குறை காணும்போது தம்மிடம் உள்ளனவும் நல்லனவா என்பதை எண்ணிப்பார்த்திட வேண்டும். இப்படித் தன்னையும் பிறரையும் ஒப்ப நோக்கும் உயர்ந்த நெறியைத் தெரிந்து கொண்டால் மனம் திருந்தும், பண்படும்—அதனால் பயனும் உறலாம்.

"ஏதிலார் குற்றம்போலத் தன் குற்றம் பார்க்கின் தீதுண்டோ மன்னுமுயிர்க்கு?" என்பது திருவள்ளுவர் கேட்ட வினா. அவர் வினவ வேண்டும் என்று மட்டும் அதனைச் சொல்லவில்லை. அந்த வினாவிற்கு விடை கண்டு உலகம் திருந்த வேண்டும் என்றும் தான் விரும்பினார். அதனைத்தான் தன்னைப்பற்றி எண்ணி மகிழும் மனம் உணர்ந்து குறை களைந்து திருந்த வேண்டும். அந்த முயற்சியில் தன்னைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் ஆராயலாம்—அது நல்லதுமாகும்.

★

# பயத்தால் மாண்ட பரிதாபம்!!

**விசித்திரமான சாவு!**—என்று, விசாரணை செய்தவர், அறிவிக்கிருர். படிக்கும் நமக்கோ, விழிகள் குளமாகின்றன!!

**கணவனும் மனைவியும்!**—காடு வாவா என, வீடுபோபோ எனும் கட்டத்திலேயிருப்போரல்ல, நாடி தளர்ந்து, நரம்பிழந்து, நரை மூத்த பருவத்தினருமல்ல. எனினும, இருவரும் செத்தனர்—தற்கொலை, செய்துகொண்டனர்!!

**இருவர் மட்டுமா? அல்ல!** அவர்தம் குழந்தைகள் மூன்று—முறையே பத்துவயது. ஒன்பது வயது, ஐந்துவயது — அவைகளைச் சாகடித்துவிட்டுப் பிறகு, அவர்களும் செத்தனர்!!

"யாரந்தப் பாவிகள்?" என்று கேட்கத் தோனறும். பாவிகளல்ல, பரிதாபத்துக்குரியவர்கள், என்கிருர், விசாரித்தவர். அவர்தம விளக்கம், வேதனையை இனனும் அதிகமாக்குகிறது.

ஆண்ட்ரூ மார்ஷலும், அவரது மனைவியும, அக்கிரமக்காரர்களல்ல. ஆனுலும் அவர்கள் இங்கிலாந்திலுள்ள லங்காஷயருக்கருகில இறந்துகிடந்தனர். எனன விஷயம் எனறு விசாரிக்க, "எங்களுக்கு முனனரே குழந்தைகள் சண்டரா, யோவனு, மோய்ரா ஆகியோரையும் சாவுலகுக்கு அனுப்பிவிட்டோம். ஏன் இக்கொடுஞ்செயல் என்று கேட்பீர்கள். இதோ, இக்கடிததத்தில் அதனையும குறிப்பிடுகிருேம" எனறு ஒரு கடிதம எழுதிவைத்தனர். கடிதமா, அது? அல்ல, அல்ல! மனித உலகுககு விடுத்த எச்சரிககை எனலவேண்டும்!!

*

பரந்து கிடக்கும வானம் விரிந்து கிடக்கும் பூமி, அழகு உமிழ் மலைகள், அருவிகள், கனிதரும் தருக்கள், கானம்பாடும் வானம்பாடிகள், நெல்லும் கோதுமையும் வழங்கும் பூமாதா, தோண்டினுல் தங்கம் இத்தனையும் இருக்கின்றன உலகில். ஆடுகிருன், பாடுகிருன், இசையுண்டு, கூத்துண்டு நியூயார்க்கில் பேசினுல் உடனே இலண்டனில் கேட்கலாம்! பேசுகிறவரைப் பார்க்க விரும்பினுல் டெலிவிஷனும் கண்டுபிடித்திருக்கிருர்கள்!! இவ்வளவும் இருந்தாலும், மனிதன் அச்சமின்றி வாழ முடிகிறதோ? அதுதான் இல்லை! ஏழை, அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன செய்வதென்று அஞ்சுகிருன், குமாஸ்தா, வயது வந்த பெண்ணுக்கு வரன் தேட வேண்டுமே, வரும் சம்பளமோ குடும்பச் செலவுக்கே போதவில்லையே என்று பயப்படுகிருன். இப்படி பயமும் சோகமும், ஏழையருலகைத் தாக்குகின்றன! இன்பமும் துன்பமும் வண்டிச் சக்கரங்களைப்போல —இவைகளைச் சமாளித்துக்கொண்டு வாழ்வதில் தான் இன்பம இருக்கிறது என்று மனிதன் வாழ நினைத்தாலும், வல்லரசுகள் அவனை நிமிடா நிமிடமும் அஞ்சி வாழும்படியே செய்கினறன!! அணு குண்டு என்கிருர்கள்—அதை வீசினுல் அண்டமே வெடித்துவிடும் என்கிருர்கள்—ஜப்பான் மீது உலகப் பெரும் போரின் முடிவில் வீசினுர்களே அப்போது என்ன நேர்ந்தது தெரியுமா என்று ஒருவர் வர்ணிக்கிருர் — "நான கல்லூரியிலிருந்தேன், ஒரு சப்தம் கேட்டது; மறுவிநாடி மண்ணுக்கடியில் கிடந்தேன்; எழுந்து பார்த்தபோது பகலிலேயே இரவு வந்துவிட்டது போல இருந்தது, கிளம்பினேன பெரியதோர்சுடுகாடாகஇருந்தது, ஐயோ! கோரம...அப்பப்ப...அவ்வளவு பிணங்களை யாருமே பார்த்திருக்க முடியாது...உடலெல்லாம் எரிவதுபோலிருந்தது, குளமொன்றில் இறங்கினேன்...குளமா அது? ஒரே இரத்தம்! கால் வைத்த இடமெல்லாம் அறுந்துபோன காலும் கையும் தலையும் முண்டமும் மோதின...கரையேறினுலோ, கரிக்கட்டைகள்போல், சற்று நேரத்துக்கு முன் உல்லாசமாகவும் உற்சாகத்தோடும் நடமாடிய மனிதர்கள் பிணமாகிக் கிடந்தனர்" என்று. இதைக் கேட்கிருேம். அதே சமயத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவும், இங்கிலாந்தும் போட்டியிட்டுக்கொண்டு அணு குண்டுகளை உற்பத்தி செய்து குவிப்பதாகப் படிக்கிருேம். ஜப்பானியக் கடலில், ஈராண்டுகளுக்குமுன் அமெரிக்கர் பரிசோதனை நடத்த, அக்காற்று பட்டு பலர் என்ன கதியாயினர் என்பதைப் படங்களில் பார்த்தோம்! அக்காற்று கடல் நீரில் கலந்து, அக்கடலில் வாழும் மீன்களுக்கும் அணுவிசைச் சக்தியேறி அந்த மீனகளை உண்டோரும் சாவுக்கு இரையாவதாக ஏடுகள் சொல்லின!! ஆறு மாதங்களுக்கு முன்பு, இங்கிலாந்து இன்னெரு குண்டினை வெடித்துப்பார்த்ததாக சேதிகள் வந்தன. உடனே உலகமெல்லாம் பரவிய 'இன்புளுயன்சா'வுக்குக் காரணம் அதுவே, என்ருர்கள்.

இப்படி அச்சமூட்டும் செய்திகள் அனுதினமும வருகின்றன! செய்திகளை யாரும் மறுப்பதற்கில்லை. ஏனெனில் அணுசக்தி, சாதாரணமானதல்ல. அதன் மூலம செய்த குண்டு, இரோஷிமாவில் வீசப்பட்டபோது, எனன கதி நேர்ந்தது எனபதை உலகமே கண்ணாரக் கண்டது. ஆகவே, அணுவின அடிபபடையில் செயயபபடும் எந்தக் குண்டுகளாலும, மனித சமுதாயத்துககே அழிவு

என்பதை, உலகமே ஒப்புக்கொள்கிறது. "இது அக்ரமம்! அடாத செயல்!! அணுவை ஆயுதமாகப் பயன்படுத்தல் அழகல்ல," என்று நல்லோரெல்லாம், வல்லரசுகளுக்கு, ஒவ்வொரு நாளும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இருந்தும், இந்தக் கிழமை அமெரிக்கா, தன்னுடைய 13-வது குண்டினை வெடித்துப் பார்த்ததாகச் செய்தி வருகிறது. இதைக் கேள்விப்பட்டதும் ரஷ்யாவும், தான் செய்த குண்டு ஒன்றை வெடித்துப் பார்க்காமல் விடாது.

இப்படி இரு கூடாரங்களும், இந்த வேதனையை விளையாட்டாகக் கருதுவதைக் கண்டிக்க, இங்கிலாந்தில் ஒரு இயக்கமும் உருவாயிற்று. அமெரிக்கா, ரஷ்யாவைப் போல, இங்கிலாந்தும் அணு குண்டுகளைச் செய்து, வெடித்துப் பார்க்க முற்படவே, அவர்கள் எங்கே வெடிக்க இருக்கிறார்களோ அந்த இடத்துக்கேப் போய் உயிரைத் தத்தம் செய்து, தத்தமது அதிருப்தியை உலகுக்கு எடுத்துக்காட்டுவதென ஒரு இயக்கம் உருவாயிற்று!! இருந்தும், இன்னும், இந்தப் பித்துப் பிள்ளை விளையாட்டை வல்லரசுகள் விடவில்லை — வர வர குண்டுகளை வெடித்துத்தமது பராக்கிரமத்தை ஒலி பரப்புவதில் ஈடுபடுதலைக் கண்டார், ஆண்ட்ரூ — மனம் துடித்தார்.

"போர்! போர்!! எங்கும் எப்போதும் இதே பேச்சுத்தானா?',

"மனிதன் சண்டையும் சச்சரவும் போட்டுக்கொண்டு சாகத்தானா பிறந்தான்?"

"வாழ்கின்ற கொஞ்ச நாட்களில், இயற்கை கொடுத்த இன்பங்களைத் துய்த்து, எல்லோருக்கும் ஏதாவது உதவிகள் நல்கி, தனது ஆயுளை அமைதியோடு கழிக்க விடமாட்டார்களா?"

"நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில், இலட்சக் கணக்கில், போர் என்று சொல்லி பிணமாக்குகின்றனரே, இதுவா மனித நீதி? போராடும் வீரர்களை மட்டுமின்றி, சாதாரண மக்களையும் குண்டுகள் போட்டுக் கொல்லுகிறார்களே!!"

"நாளைக்கு ஒரு யுத்தம் வந்து, இந்த அணுகுண்டுகளை ஒருவருக்கொருவர் வீசிக்கொண்டால் என்ன ஆவது?"

என்ன ஆகும்? கணவன் மனைவியைப் பார்த்துக் கேட்டார்! மனைவி, மலர் முகம் காட்டி, தளிர்க் கரம் நீட்டி விளையாடும் குழந்தைகளைக் கண்களால் காட்டினாள்!!

"கண்ணே மணியே—விளக்கே—ஒளியே—என்று கொஞ்சி மகிழ்கிறோமே இந்தக் குழந்தைகளின சதை பிய்த்துப் பிய்த்து எறியப் படும்......"

"ஐயோ!"

"அணுகுண்டு வீசப்பட்டதும் கரிக்கட்டைபோல், வதங்கி வாடிக் கிடப்பர்..."

"ஐய்யோ!"

"கால் ஒருபக்கம் போய் விழும் —கண்ணுளளே இருக்கும மணி சிதறிடும்—தலை பொடிப் பொடியாகும்..."

"போதும், சொல்லாதே—மயக்கம் வருகிறது. இப்போது ஆனந்தமாக இருக்கும் நாமும் சாவோம்—நாம் கொஞ்சிக் குலவும் இந்தக் குழந்தைகளும் சாவார்கள் அல்லவா?"

"யார் கண்டார்கள்? நாம் பிழைத்து அவர்கள்கூடச்சாகலாமல்லவா!"

இதுபோல், ஆண்ட்ரூவும் அவர்தம் மனைவியும் எத்தனை நாள் பேசினரோ — கடைசியில், வாழ்க்கையையே வெறுப்பதென்கிற முடிவுக்கு வந்தனர்.

**'யுத்தமேகம் பற்றிய செய்திகளே வருகின்றன. அப்படியேற்பட்டால் எத்தனையோ பேர் சாக நேரும். அப்படிச் சாகிறவர்களாக, எங்கள் குழந்தைகளும் இருக்கக்கூடும். சூதுவாதறியாத இந்தச் சுதந்திர மலர்கள், வளர்ந்த மனிதனின் வெறிக்காகப் பலியாவதா? எண்ணும்போதே, எங்களால் தாங்க முடியவில்லை. உலகத்திலே வாழ ஆசைப்பட்டால்தானே, இந்த அச்சமும் தொல்லையும். செத்தேவிடுகிறோம்; எங்கள் குழந்தைகளையும் சாகடித்துவிடுகிறோம். ஏனெனில், நாளையதினம் அவர்களுக்கு ஏற்படப்போகும், ஆபத்தை எண்ணவே மனம் கூசுகிறது, எமக்கு'** — என்று கடிதம் தீட்டி வைத்துவிட்டு, தம்பதிகளிருவரும் பிணமாகிவிட்டார்கள். பிணத்தைப் பரிசோதனை நடத்தியவர், விசித்திரமான சாவு என்று அறிவிக்கிறார்! படிக்கும் நமக்கோ, பதறுகிறது மனம்!

* * *

வாழப்பிறந்த மனிதன் அடி, குத்து, வெட்டு, என்று ஆதிக்க ஆசையின் காரணமாக, மிருகத்தினும் கேவலமாவதைத் தடுக்கவே புத்தர் புகன்றார் அன்பு வேண்டும் என்று! அதே நெறியினை இயேசுவும் சொன்னார்! நபியும் வலியுறுத்தினர்! அன்பால், நியாயத்தால், எதற்கும் முடிவு காண முடியும். நமது வள்ளுவப்பெருந்தகையும், 'அன்புடையவர் எல்லாம் உடையவர்' என்று சொன்னார்! ஆனல் அறிவுலகம், இன்றைய தினம் இயேசுநாதரைப் போற்றிக் கொண்டே, இது போன்ற அழிவு வேலைகளில் ஈடுபடுகிறது—தன்னையே அழித்துக் கொள்ளச் சதி செய்து வருகிறது.

இந்த அலங்கோலத்தை உலகுக்கு உணர்த்தவே, ஆண்ட்ரூ குடும்பம், சாவை விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது மிக மிகப் பரிதாபம் என்போம்! அவர்களது முடிவும் கடிதமும், இதயமுடைய அனைவரையும், ஏக்கத்திலாழ்த்தும்!!

பிரேசில், அர்ஜண்டைனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கானடா, செக்கோஸ்லோவேக்யா, எகிபது, பிரானஸ், இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், பாகிஸ்தான், பெரு, போர்ச்சுகல், தென் ஆபிரிகா, ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய 18-நாடுகளைக்கொண்ட அணுசக்தி கமிஷன ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை நிறுவி இருப்பதாகவும், அணுசக்தியைப் பயனுள்ள காரியங்களில் பயனபடுத்த இக்கமிஷன மார்க்கம் காணுமென்றும் 19-ந் தேதிய செய்தியொன்று குறிப்பிடுகிறது.

உலகை அழிவிலிருந்தும் தடுக்க, இக்கமிஷன ஒழுங்காகப் பணிபுரியின் இயலும். இதில், வல்லரசுகளாக விளங்கும் ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் மூனறும் இருப்பதால், உலகைக் காக்க முயலுவர் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறது. இந்த நம்பிக்கை செயலாக வேண்டும் என்று மனதார விரும்புகிறோம — ஆண்ட்ரூவின் பரிதாபக் கடிதம், இந்த நிலை ஏற்பட வேண்டியதன அவசியத்தையும் அவசரத்தையும், உலகுக்கு எடுத்துச் சொல்லுகிறது. பயத்தால், வாழப் பிறந்தவன், சாவதா! கோரம்! கோரம்!!

★

# அழகு மயிலும்! ஆடும் மந்தியும்!!

"தேங்கா மரத்திலே மாங்காய் பறிக்க...!"

"என்ன! என்ன! தேங்காய் மரத்திலே மாங்காயா?"

"ஆமாம்! தேங்காமரம் என்றதும் தென்னைமரம என்றுதானே எண்ணிணய். **தேம்** — என்ருல், தேனினுமினிய என்று பொருள். **கா**—என்ருல் சோலை. தேனினுமினிய சோலையிலே மாங்காய் பறிக்க, என்று சொனனேன். என்ன தவறு!!"

•

"கொக்கு ஒன்றை வீழ்த்திட ஆறு நாட்கள் ஆயிற்று? என்னய்யா அதிசயம்! வில்லேந்தும் வேடர்குலத்து ஆளுக்கா, கேவலம ஒரு கொக்கை வீழ்த்த ஆறு நாளாயிற்று! ஆறு நாள..."

"அவசரப்படாதீர்! கொக்கு என்ருல் மாமரம் எனகிற பொருள உண்டு, தெரியுமா? சூரபதமனுடன், குமரன் ஆறு நாட்கள் போர்புரிந்தானும். சூரன் தோற்று ஓடி மாமரமாக நின்ருனும. அதைக் கடைசியில் வேலவன் வீழ்த்திணனும. அதைக் குறிப்பிடுகிருர் கவிஞர் இப்படி."

•

குற்ருலக் குறவஞ்சி, தேங்கா மரம் எனபதற்கு தித்திக்கும் இவ் விளக்கம் தருகிறது! அழகிம்மை ஆசிரிய விருத்தம் எனும் நூலில் கொக்கை வீழ்த்த ஆறு நாட்கள் என்பதில், வியக்கும் இருபொருள் பதுங்கியுள்ளது! மாமரம் — என்ருலே. மா-பெரிய, மரம் என்றும் பொருள கூற இயலும. இவ்வண்ணம இரு பொருள் தொனிக்க, சிலேடை நயம் மினன வழங்கும் கவிதைகள் தமிழில் ஏராளம்—ஏராளம்!! சிலேடை நயம் அமைத்து செய்யுட்களையாப்பதில், கவி காளமேகம், ஒரு கற்பனைச் சுரங்கம். அவன் ஒரு நாள் நாகைப் பட்டினம சென்றிருந்தானும்— அங்கே காத்தான் என ெருரு வள்ளல். அவனுக்குச் சொந்தமான சத்திரம, கவிக்கு விடுதியாக அமைந்தது. விடுதியில், நேரம் பறந்தது. பசியோடிருந்த காளமேகத்துககோ, ஆத்திரம் அதிகமாயிற்று. உடனே, பாடினன், கோபத்தோடு.

கத்து கடல் சூழ் நாகைக்
காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது
அரிசி வரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும்
ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்

"ஐயோ! என்னை இபபடி அவமானம செய்துவிட்டீர்களே. கவிஞர் பெருமானே! பிழை பொறுத்தருளும" என்று

**அரங்கண்ணல்**

ஓடோடி வந்த காத்தான், புலவருக்கு வேண்டிய அறுசுவை உணவையும் அளித்து, தன் பிழை பொறுக்குமாறு கெஞ்சி நிற்க, காளமேகம் புன்சிரிப்போடு, "காத்தான்! மேலெழுந்த வாரியாகப் பாடலைக் கண்டு உன்னையும் உன் சத்திரத்தையும் இகழ்ந்தேனென்று எண்ணுகிருய. உண்மைப பொருள என்ன தெரியுமா? கேள! ஒலமிடும் கடல் சூழ்ந்த நாகையில் உள்ள காத்தானசத்திரத்தில்— அத்தமிக்கும்போது அரிசி வரும் — ஊரெல்லாம் பஞ்சம பட்டினியென்றபோதும் தட்டாது அரிசி கிடைச்கும்; குத்தி உலையிலிட ஊரடங்கும—சமைக்க ஆரம்பித்துவிட்டாலோ பசியால் தவிக்கும் ஊரே உண்டு மகிழும் படி கிடைக்கும்; ஓரகப்பை அன்னம் இலையிலிட—ஒரு அகப்பை சோற்றை இலையில் எடுத்துவைத்தாலோ; வெள்ளி எழும்—கீழ் வானில் முளைக்கிறதே அந்த வெளளிகூட நம்மை விட இச் சோறு வெண்மையாயிருக்கிறதே என்று நாணும்! இப்போதுசொல் —நான் புகழ்ந்து பாடினனேனு, இகழ்ந்து பாடினேனு?" என்று கேட்டாராம்!!

இதுபோல் சுவை சுரக்கும் பாடல்களைத் தமிழைத் தவிர வேறெங்கும் காண இயலுமோ! இரு பொருள் மடக்கி, அதன் மூலம சுரங்கமாய் விளங்கும் சுந்தரக் கவிதைகள் தமிழினும் பிற மொழிகளில் இருக்க இயலுமோ!! இதோ ஒரு பாட்டு.

"............காரோடும்
கந்தரத்த ரந்த ரத்நர்
கந்தரத்த ரந்த ரத்தர்
கந்தரத் தரந்த ரத்தர் காப்பு"

இதென்ன பாடலா! என்ன பொருள் இதற்கு? ஒரே 'கந்தரத்தர்' என்றுளதே என்று வினவலாம். உண்மையில் எழுத்துக்கள் யாவும் ஒன்றே எனினும், அவை சொல்லும் பொருள்கள், வேறு வேருகும்.

காரோடும் கந்தரத்தர்:- கருமை நிறம பரவிய அழகிய கழுத்தையுடையசிவன்,

அந்தரத்தர்:- ஆகாயத்தை உடம்பாகக் கொண்டவர்.

தந்தரத்தர்:- பற்றுக் கோடாகிய சிவந்த நிறத்தையுடைய சிவன்

அம் தரத்தர்:- நீரைச் சடையில் கொண்ட சிவன்

கந்தரத்தர்:- முருகனுடைய தந்தையாகிய சிவன்.

அம் தரத்தர்:- அழகிய தகுதியுடையவர்.

சிவனையே இவ்விதம் வர்ணிக்கிறார், புலவர்! வர்ணிக்கப்பட்ட பொருள் ஒருபுறம் இருக்கட்டும். அழகும் புதை பொருளும் எவ்வளவு ஆனந்தத்தை நல்குகிறது? பைந்தமிழ்ப் பனுவல்களுக்குள் நுழைந்திடுவோமாயின, வேறு ஆனந்தமாவேண்டும்? அகமும் புறமும் ஐம்பெருங் காவியங்களும் அள்ளியள்ளித் தரும் இன்பம் ஒருபுறமிருக்கட்டும்! இப்படி ஆங்காங்கு தென்படும் சில்லரைக் கவிதைகள் கூட, எத்துணைச் சிறப்பும், நிறைந்த கருத்தும் தாங்கி நிற்கின்றன. ஒரே ஒரு வார்த்தை! ஆனால், அதற்கு எத்தனை பொருள்கள்!!

* * *

இப்படிப்பட்ட ஒரு மொழி, எந்த அருகதையும் இல்லாத வேறு ஒரு மொழிக்குச் சிரம் வணங்கி சித்திரவதையாக வேண்டுமெனின், இதயம் குமுறாதா? கடந்த கிழமை, மறைந்து போன பி. ஜி. கெர் என்பார் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு, "இந்தி எப்படியும் இந்த உபகண்டத்து அரசியல் மொழியாக வேண்டும்," என்று சிபாரிசு செய்திருந்தது. தமிழகத்தவரும் அக் குழுவின் அங்கம் வகித்தவருமான டாக்டர் சுப்பராயன் இந்த அவசரக் கோலத்தைத் தான் ஏற்கவில்லை. ஆங்கிலத்தை அவ்வளவுவிரைவில் வெளியேற்றலாகாது என்று குறிப்பெழுதியிருந்தார். இருந்தும் இதோ, பார்லிமெண்டிலே ஆகஸ்டு 17ந் தேதி அறிவிக்கிறார் உள்நாட்டு துணை மந்திரி பி. என். தாதர், **"1965க்குள், எல்லா சர்க்கார் காரியங்களும் இந்தியில் நடைபெறுமாறு ஆகிவிடும். அதற்குள், அதிகாரிகள் யாவரும் இந்தி கற்றுக் கொள்ளுமாறு செய்யப்படுவார்கள். மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்கு மிடையிலே மட்டுமல்ல, மாகாணத்துக்கு மாகாணம்கூட இந்தியிலேயே அரசாங்கக் கடிதப். போக்குவரத்துக்கள் நடைபெற நேரும்,"** என்று அறிவித்திருக்கிறார். 1965க்குள்! அதாவது, இன்னும் எட்டே எட்டு ஆண்டுகளுக்குள், "இந்தி"மயமாகப் போகிறதாம், நாடு!!

இன்று தொட்டல்ல நீண்ட நாட்களாக எதிர்க்கிறோம் — நாம் மட்டுமல்ல; யார் இங்கு இந்தியைத் திணித்தாரோ அந்த ஆச்சாரியாரே எதிர்க்கிறார் — பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் எதிர்க்கிறார்கள் — பல்கலையுணர்ந்த அறிஞர்கள், 'அவசரப்படேல்' என்கிறார்கள் — ஆங்கிலத்தின் இடத்தை இந்தி எட்டிப்பிடிக்கவும் இயலாது என்கிறார்கள்—ஆனால் டில்லி அமைச்சரோ எட்டே எட்டு ஆண்டுகளில் இது நடக்கும் என்கிறார்! இவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்று அறிந்தும் உறுதியாக அறிவிக்கிறார்!!

கார்டிலே இந்தி — தந்தியிலே இந்தி—மணியார்டரிலே இந்தி—காசிலே இந்தி—பெயரிலே இந்தி உத்தியோகத்துக்கும் இனி இந்தி வேண்டுமாம்! அப்போதுதான் உத்தியோகம் அளிக்கப்படுமாம்!! ஐயகோ! இதனை எண்ணும்போது அழகுத் தமிழ் பெற்ற நமக்கு எப்படியிருக்கும்? சுந்தரச் செந்தமிழ் சாவதாமே! அதுவும் சோணகிரி மொழியிடம் வீரர்தம் மொழி, சரணடைவதாமே!! தன் வசம், அரிய இலக்கியங்களையும், மாற்றோர் கண்டு மருளும் குறளையும், ரசித்து வியக்கும் பொருள் தரும் கவிதைகளையும் வைத்திருக்கும் தமிழ் அடிமைப்படுவதாமே? இந்த நாட்டிலுள்ள, ஒவ்வொருவரையும் கேட்கிறோம்—தமிழின் அழகுக்கு ஓரிரு உதாரணங்களை மேலே கண்டீர்கள்! ஒரு சொல்லுக்கு பல்பொருள் தருகிறது தமிழ்!!

**இந்தியில், இப்போதுதான் சொற்களையே கண்டு பிடிக்கிறார்களாம் — சொற்களை கண்டுபிடிக்கிறார்கள்! இருபதாம் நூற்றாண்டில் ஒரு மொழிக்குச் சொற்களைக் கண்டுபிடிக்கிறார்கள்!!**

வெளிநாட்டான் விஞ்ஞானத் துறையில் ஏதேதோ அற்புத சாதனைகளைக் கண்டுபிடிக்கிறான் —ஆனால், நமது அருமந்த டில்லி பீடத்தினர், சொற்களைக் கண்டு பிடிக்கிறார்கள்! ஏனெனில் அவர்கள் அரசு மொழியெனப் பிரகடனப் படுத்தியிருக்கும் இந்தியில் அப்படிப்பட்ட சொற்கள் இல்லையாம்—ஆதலால், குழுவொன்று உட்கார்ந்து, புதிய வார்த்தைகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறது!!

அருந்துகிறோமே 'டீ' அதற்குத் தமிழில் 'தேநீர்' என்போம் — 'தேத் தண்ணீர்' என்கிற வார்த்தையும் உண்டு—'சுவைநீர்' என்று சொல்வோரும் உளர் இந்த ஒரு பொருளுக்கு இத் துணைச் சொற்கள், தமிழில் உள்ளன!!

இந்தியில்? 'டீ' என்பதற்குத் தனியான சொல் இல்லையாம்! அதனால், நேருவின் மாகாணத்திலுள்ள ஒரு பத்திரிகை, ஒரு புதிய வார்த்தையைக் கண்டு பிடித்துத் தந்திருக்கிறது--என்ன வார்த்தை தெரியுமா? **துக்த சர்க்கர மிஸ்ரித் பர்வதோ உத்பன்ன வாஷ்பமயே பயே**—மயக்கம் போட்டு விழுந்து விடாதீர்கள்! 'டீ'—'தேநீர்' — என்பதற்குத்தான் இந்தியில் இப்பெயர்! ஒருமுறை சொல்லுங்கள்—வேகமாகச் சொல்லிப் பாருங்கள்—இந்தியின் இலட்சணம் புரியும். 'தேநீர்' எவ்வளவு ரத்னச் சுருக்கமாக உள்ளது. தே — சுவையுள்ள, நீர்—நீர், என்று பொருள் கொள்ளலாம், எளிதில். இந்த துக்த சர்க்கர etc என்றால் என்ன பொருளாம் தெரியுமா **மலையில்விளைந்த ஏதோஒரு பொருளுடன் பாலும் சர்க்கரையும் வெந்நீரும் கலந்த ஒரு பானம்** — என்று அர்த்தமாம்!!

*

இந்த அழகிலிருக்கும் இந்தி, நம் தலையில் உட்காருவதாப? இதை நாம், "ஏக இந்தியா" என்கிற பெருமைக்காக ஏற்றுக் கொள்ள வேண்டுமாம் — 1965-க்குள் நம்மீது எப்படியும் திணிக்கப் படுமாம். கோரமுள்ள குரங்கு! அழகு மயில்!! — இரண்டில் எது வேண்டுமெனில் குழந்தையும் பதில்கூறும். மயிலைத் தா என்று. ஆனால், ஆளும் வடவர்கள், மந்தியை வழங்குவோம் என்கின்றனர். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எச்சரிக்கையும் அனுப்புகின்றனர்.

இந்தி மொழியின் 'யோக்யதை' குறித்து, இதோ சில, சான்றுகள்.

"இந்தி வளர்பெறாத நிலையில் இருக்கிறது. தமிழ், வங்காளி, மராத்தி, குஜராத்தி போன்றவைகளைவிட அதன் கருத்துச் செறிவு

மட்டமாகவே இருக்கிறது. இந் நிலையில் அகில இந்திய விவகாரங்களில் அதைப் பயன்படுத்தத் தொடங்கினால் நன்மையைவிடத் தீமைதான் அதிகமாகும்.

கன்றுக் குட்டிகளைக் கூட்டித் தாம்பு அடித்தால் நெல்லும் ஆகாது; வைக்கோலும் ஆகாது என்று தமிழ் நாட்டில் சொல்லுவார்கள். அந்தக் கன்றுக்குட்டி நிலையில் இருக்கிறது இந்தி!

பெரும்பாலோர் பேசுகிறார்கள் என்பதாலேயே அகில இந்திய ஆட்சி மொழி ஆவதற்கான தகுதியை அது அடைந்துவிட்டதாகக் கருத முடியாது.

நமது தலைமுறையிலோ அல்லது அடுத்த ஐந்து, பத்து ஆண்டுகளிலேயோ இந்தியை டில்லி, அரியாசனத்தில் ஏற்றிவிட நினைப்பது மதியீனம்.''

இவ்வாறு எழுதுகிறது தினமணி — ஆம், காங்கிரசின் ஓசை எழுப்பும் தினமணிதான் இவ்விதம் எழுதுகிறது! இன்னொரு தேசிய ஏடான 'சுதேசமித்திரன்' தீட்டுகிறது.

''இந்தி இன்னும் அரசாங்க நிர்வாகத்திற்கு ஏற்ற மொழியாக உபயோகப்படுவதற்கான தேர்ச்சிபெறவில்லை. அத்தகைய தேர்ச்சி பெறும்வரை இப்போதுபோல் யூனியன் விவகாரங்களில் ஆங்கிலம் கையாளப்படுவதுதான் பொருத்தம் என்பதை அறிஞர்கள் பலர் எடுத்துக்காட்டி இருக்கின்றனர். எனினும் யூனியன் சர்க்கார் விவகாரங்கள் அனைத்தும், இந்தியில் நடக்கக்கூடிய நாள் வெகு சமீபத்தில் இருப்பது போல், மொழிக் கமிஷன் திட்டம் வகுத்துள்ளது.

இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் மத்திய சர்க்காரில் உத்யோகம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அம்மொழியைக் கற்காவிட்டால் அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பவைபோன்ற சிபாரிசுகள் இந்தி தெரியாத ராஜ்யங்களில் ஆத்திரமுண்டாக்கும்.

இந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ள சட்ட சபைகளின் அபிப்பிராயத்தை அறியாமல் எவ்வித நிர்ப்பந்த முறையையும் கையாளுவது வீணாக அனர்த்தத்திலேயே போய் முடியும்.''

'நவ இந்தியா' நமது ஏடல்ல, அது எழுதுகிறது:

''முதலில் ஆட்சி மொழியாவதற்குரிய தகுதியை இந்தி பெறட்டும். அதன் பிறகு வேண்டுமானால் அதை அரசாங்க மொழியாக்கிக்கொள்ளலாம்.''

மதுரையிலிருந்து வெளிவரும் 'தமிழ்நாடு' தீட்டுகிறது.

''பல மொழிகளை அரசியல் மொழிகளாக ஏற்றுக்கொள்வதில் புதுமையோ, இடர்ப்பாடுகளோ எவையும் இல்லை.

உலகின் பல்வேறு நாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக சுவிட்சர்லாந்தில் ஜெர்மன், பிரெஞ்சு, சுவிஸ் மொழிகளும், பெல்ஜியத்தில், ஜெர்மன், பிரெஞ்சு மொழிகளும்; இத்தாலியில் இத்தாலியன், பிரெஞ்சு, உரோமன் மொழிகளும்; கனடாவில் பிரெஞ்சும், ஆங்கிலமும் ஆட்சி மொழியாக உள்ளன. ரஷ்யாவில் கூட ஆறு மொழிகள் அரசியல் மொழிகளாக விளங்குகின்றன''

இந்தி மொழிக் கமிஷனின் அறிக்கையினைக் கண்டதும் ஏடுகள் இவ்விதம் தெரிவித்தன! எனினும் டில்லி மந்திரி தாதர், இன்னும் எட்டு ஆண்டுகளில் இந்தி அரசு மொழியாகும் என்று அறிவிக்கிறார்!!

ஏகமனதாக இந்திய சட்டத்தில் ஏறவில்லை 'இந்தி'. இதை சட்டம் செய்த அம்பேத்கார் ஒரு நூலில் எழுதியுள்ளதாக 'இந்து' ஏட்டில் எடுத்துக்காட்டுகிறார் ஒருவர்.

''இந்தியைத் தேசிய மொழியாக்க வேண்டும் என்று அரசியலமைப்பில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட வேண்டுமென்கிற யோசனை காங்கிரஸ் கட்சிக்கூட்டத்தில் வந்தபோது, என்ன நடந்தது என்கிற இரகசியத்தைச் சொல்லுகிறேன். அரசியலமைப்பிலுள்ள இந்த 115ஆவது விதியை நிறைவேற்றுவதிலிருந்த சிரமம் வேறு எதிலுமில்லை. இதற்குத்தான் பலத்த எதிர்ப்பு இருந்தது. நீண்ட விவாதத்திற்குப் பிறகு, ஓட்டுக்கு விட்டதில் 'இந்தி வேண்டும்' என்கிற கோரிக்கைக்கு 78 ஓட்டும் 'இந்தி வேண்டாம்' என்பதற்கு அதே 78 ஓட்டும் கிடைத்தன. அதனால் ஒருவித முடிவும் எடுக்கப்படவில்லை. பிறகு நீண்ட நாள் தள்ளிப்போட்டு, ஓட்டு எடுத்தபோது வேண்டாம் என்பதற்கு 77ம் வேண்டும் என்பதற்கு 78 ஓட்டுகளும் கிடைத்தன. இப்படி ஒரே ஒரு ஓட்டில்தான், இந்தி, ஏற்றுக் கொள்ளப்பட்டது''

**ஒரே ஒரு ஓட்டு!!** — இதிலேயே. இந்திக்கு எவ்வளவு ஆதரவிருந்தது என்பது விளங்குகிறது. இருந்தும், டில்லி ஆதிக்கக்காரர்கள் எப்படியும் இமயமுதல் குமரிவரை இந்தியைப் பரப்பிவிடுவது என்னும் பிடிவாதத்துடன், அமுலாக்கத் துடிக்கின்றனர்— தாதர், அறிவிக்கிறார், 1967க்குள் வந்துவிடுமென்று!!

''தமிழ் நாடு''. எனவும் பெயர் வைக்க முடியாத நிலையில், டில்லியின் கட்டளையைச் சிரமேற்தாங்கிய மாநில அரசு. தமிழுக்குவரவிருக்கும் இந்தமாபெரும் ஆபத்தினை, கிள்ளி எறியும் என்கிற நம்பிக்கைக்கு இடமில்லை. எனவே, தாயமொழியைக் காத்திட, தமிழகம் வீரப்போர் ஒன்றினைத் துவக்கவேண்டிய கட்டம் வெகுதூரத்தில் இல்லை! இதனையே, டில்லி மந்திரியின் அறிவிப்பு உணர்த்துகிறது!!

எட்டே ஆண்டுகளில் — நீதிமன்றங்களில், வியாபார விவகாரங்களில், கணக்கு எழுதிக் காட்டுவதில், கல்லூரியில பயில்வதற்கு, சர்க்காரில் உத்தியோகம் பெற, இப்படி எல்லாத் துறைகளிலும் இந்தி புகுமாம்! ஏடும் நாடும் இடித்துரைத்தும், அறிவிக்கிறார் தாதர்—ஏக்கெழுத்தும் பீடுநடையும் பெருமித மெரழியும் கொண்டோரே, என்ன பதிலைச் சொல்ல இருக்கிறீர்கள் டில்லி ஆதிக்கத்துக்கு என்ன பதிலைச் சொல்ல இருக்கிறீர்கள்!!

★

---

## முகவரி மாற்றம்

''மன்றம்'' அலுவலகமும் எனது குடியிருப்பும் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளன. என்னோடும், 'மன்றம்' அலுவலகத்தோடும் தொடர்புகொள்பவர்கள் இனிப் புதிய முகவரிக்கே தொடர்பு கொள்ளவும்.

இரா. நெடுஞ்செழியன்

புதிய முகவரி:—

''மன்றம்''
93. பிராட்வே,
சென்னை — 1.

உண்மையில் அவர்கள் உயிரோடு இருந்திருந்து, வெள்ளையன் போன பின் அதே டில்லியில் அமர்ந்து ஆட்சி நடத்தும், உங்களைச் சும்மா விட்டிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்? ஒருக்காலுமில்லை! கேரளத்தை ஆள டில்லியார், யார்?—என்று கர்ச்சித்திருப்பார், வேலுத் தம்பி. நான் அடிமையாக, உங்கள் பாதாரவிந்தங்களில், நம்பூதிரிபாட் போன்றவர்களால் கிடத்தப்படும் கோரம் நிகழ்ந்திருக்காது. கட்டப்பொம்முவும், வேலுத் தம்பியும், வீர மருதுகளும் வெள்ளையனை எதிர்த்தது—வெள்ளையன் ஒரு அந்நியன் என்பதால்தான்!! நீங்கள் மட்டும் என்ன? எங்களைப் பொறுத்தவரையில், அந்நியர்தானே? இல்லை என்று கூற இயலுமா! வெள்ளையன் உண்டாக்கிக் கொடுத்த மாடமாளிகைகளில் அமர்ந்துகொண்டு, அவன் வகுத்துக் கொடுத்த சட்டங்களை வைத்தபடி, இமய முதல் குமரிவரை ஆள ஆசைப்படுகிறீர்கள்! இந்த ஆட்சியையா, வேலுத்தம்பி, விரும்பிப் போரிட்டார் என்று நினைக்கிறீர்கள்? கேரளத்து மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க, அந்நியர், யார்—என்று கேட்டார், வேலுத்தம்பி. கேரளத்தை யாளும் மன்னருக்குக் கட்டளையிட வெள்ளையர்கள் யார், என்று வினவெழுப்பினார். எங்கோ இருப்பவர்களுக்கு ஏன் நாம் வரிக் கட்ட வேண்டுமென்றார். அதன் பொருள், வரிகளை வாங்குவதும் கேரளமாக யிருக்கவேண்டும், வாங்கிய பணத்தைச் செலவழிப்பதும் கேரளமாயிருக்க வேண்டும் என்பதுதான். ஆனால் வெள்ளையன் தன்னுடைய படைகளுக்காகவும் பாதுகாப்புக் கோட்டைகளுக்காகவும் ஒவ்வொரு இடத்திலும், துவக்க காலத்தில் 'கப்பம்' வாங்கினான்—அதைத் தர இயலாது என்று வேலுத்தம்பி மறுத்ததே, கிளர்ச்சிக்குக் காரணமாகும்! அப்படிப்பட்ட மாவீரர், இப்போது பலவரிகள் மூலமும், டில்லிக்குப் பணத்தைத் திரட்டிச் சென்று வெள்ளையனைப் போலவே இராணுவத்துக்கும் விணடரம்பத்துக்கும் செலவழிக்கும் உங்களைக் கண்டால் சும்மாவா விட்டுவிடுவார்? நம்பூதிரிபாட், என்னைத் தத்தம் செய்துவிட்டார் தங்களிடம்! இப்போதுதான் என்னைக் கொடுத்தார்—ஆனால் என்றோ தன்னைத் தத்தம் செய்துவிட்டாரே, டில்லி ஆதிக்கத்துக்கு!! அதுதான், என் மனதைக் குடைகிறது. வீரவாள், நான்! அந்நியனும் வெள்ளையன் 150 ஆண்டுகள் என்னை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்று முயன்றும்—முடியவில்லை. கிளிமானூர் அரண்மனையினர், என்னை இழக்கச் சம்மதிக்கவில்லை. ஆனால், இன்று? உங்கள் முன்னிலையில் கிடக்கிறேன். உண்மையில், எனக்கே வெட்கமாயிருக்கிறது. வீரன் வேலுத் தம்பி வாழ்ந்த இடமா—அவன் புகழைப் பாடுகிறாரே நம்பூதிரிபாட், இது உண்மைதானா? உணர்ந்துமா என்னை உங்களுக்கு 'தானம்' அளிக்கிறார், என்று வேதனையும் விம்முதலும் எழுகிறது எனக்கு. இருந்தும், என்ன செய்வேன்? கேவலம் இரும்பாகிய எனக்கு ஏற்படும் இந்த வேதனை, என்னைவிட மேலான மனித உருவங்களுக்கே ஏற்படவில்லையே! என்னைக் கொண்டுபோய் டில்லியில் வைக்கப் போகிறீர்கள் — கேரளத்திலிருந்து டில்லி!! ஏ, அப்பா, ஏன் நாமும் வேலுத். தம்பியோடு மண்ணிலே புதைந்து விடாமற் போனோம், என்கிற குமுறல் உண்டாகிறது. யார் என்னை மீண்டும், தாயகத்துக்கு அழைத்து வரப் போகிறார்கள்? எப்போது, என் பூமிக்கு நான் வருவேன்? ஏக்கமும் துக்கமும் வாட்டுகிறது, என்னை."

★

# கலங்கும் இலங்கை!

சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது, சமாதானம் நிலைநாட்டப்பட்டது என்ற செய்தி சில வாரங்களுக்கு முன்பு வெளியானதும் இலங்கைவாழ் மக்களின் சகல பிரிவினரும் சற்று ஆறுதல் அடைந்தார்கள். ஆனால் இந்த ஆறுதல் இப்போது கலைந்து பீதியும், அங்கலாய்ப்பும் திரும்பவும் தலைகாட்ட ஆரம்பித்துவிட்டன.

வாய்ப் பேச்சளவோடு நில்லாமல் எழுத்திலே எழுதி கையொப்பமிட்ட இடைக்கால சமரஸ உடன்படிக்கையில் கண்ட இரண்டு சரத்துகளுக்கு, பிரதமர் திரு பண்டாரநாயகா வெளியிட்டுள்ள அசம்பாவித வியாக்கியானமே இந்த பயங்கரமான சூழ்நிலையை இப்போது உருவாக்கியுள்ளது. இந்த வியாக்கியான வேறுபாட்டால் திரும்பவும் வினை விளையலாம் என்று நாம் ஐயுற வேண்டியவர்களாக விருக்கிறோம்.

பேச்சு வார்த்தைகள் மேற்கூறிய கட்டத்தைத் தாண்டி ஒரு உடன்படிக்கை உருவாகும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்தது உண்மைதான். ஆயினும் இன்று முன்னேக்கிப் பார்க்கும்போது முற்றாக நீங்கி விடவில்லையோ என்றுதான் சந்தேகத்துடன் எண்ண வேண்டியிருக்கிறது.

உடன்படிக்கை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், சுதந்திரன் 4—8—57 இதழில், தீட்டிய மற்றொரு தலையங்கத்தில்,

"சமரஸ உடன்படிக்கையொன்று உருவாகிவிட்டதால், எல்லாம் சுமுகமாகத் தீர்ந்துவிடும் என்ற சுயதிருப்தியோடு தமிழ் பேசும் மக்களும். தமிழரசுத் தலைவர்களும் கிம்மதியாக இருந்துவிடக்கூடிய நிலைமை இன்னும் ஏற்பட்டுவிடவில்லையென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்,.........

"இந்த உடன்படிக்கையின் மூலம் நாம் ஏமாற்றப்பட்டுவிடாமல் சர்வ ஜாக்கிரதையுடன் பார்த்துக்கொள்ள வேண்டும். உடன்படிக்கை கைச்சாத்தான பின்னரும் பிரதமர் பண்டார நாயகா ஆங்காங்கே வெளியிடுவதாகச் சில பத்திரிகைகளில் பிரசுரமாகும் கருத்துக்கள் பொது மக்களுக்கு அவருடைய அந்தரங்க சுத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றன..........

"திரு. பண்டார நாயகா தாம் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறுவாரேயானால் தமிழரசுக் கட்சி தனது போராட்டத்தைத் திரும்பவும் எந்த நேரத்திலும் ஆரம்பிக்க உரிமையுடையதாகும். அப்படி ஆரம்பிக்க வேண்டியும் நேரலாம், என்று குறிப்பிட்டிருந்தோம். திரு. பண்டார நாயகா இப்போது ஆடும் சொற்சிலம்பங்களை அவதானிக்கும்போது நாம் கூறியபடியே காரியங்கள் நடைபெற வேண்டும் என்பதுதான் நியதியோ என்றுகூட நினைக்க வேண்டியிருக்கிறது.

"சமரஸ உடன்படிக்கை கைச்சாத்தானபோது, 'சிங்களம் மட்டும்' சட்டத்தினாலும், சிங்களக் குடியேற்றத்தினாலும் நிஷ்டூரத்துக்குள்ளாகியிருந்த தமிழ் பேசும் மக்கள், தங்கள் அரசியல் ஸ்தம்பித நிலையிலிருந்து விடுதலை பெற ஏதோ ஒரு வழி பிறந்ததே என்று சற்று ஆறுதல் அடைந்தார்கள். அந்த வழியில் முன்னேறினால் நன்மை கிடைக்கும் என்றும் நம்பினார்கள். பிரதமர் கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையினால் இந்த நம்பிக்கையில் இடி விழுந்தது போல் ஆகிவிட்டது."

—"சுதந்திரன்"